
இலங்கை முஸ்லிம் பெண்கள், சிறுமிகளின் உடல், உள நலம்
மற்றும் உரிமைகளில் விருத்தசேதனம் ஏற்படுத்தும் தாக்கம்

# FEMALE GENITAL MUTILATION OR CUT (FGMC)



பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு

“நான் பெண் குழந்தைகளுக்கான விருத்த சேதனம் பற்றிய ஆய்வாளர்களில் ஒருவராக ஆய்வினை மேற்கொண்டேன். இவ்வாய்வினைச் செய்யத் தொடங்கிய பிறகே, இது இஸ்லாத்தில் இல்லாத ஒன்று எனவும், அல்குர்ஆன் மற்றும் ஹதீஸிலோ கூறப்படவில்லை என்பதோடு, மூட நம்பிக்கைகள், சமூக வழக்காறுகளிலிருந்துமே பரம்பரை பரம்பரையாக இவை பின்பற்றப்படுகின்றன என்ற உண்மையை நான் அறிந்து கொண்டேன்.

நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். கத்னா பற்றிய விளக்கமின்றி நான் எனது மகளுக்கும் கத்னாவைச் செய்து அவளுடைய பாலியல் ரீதியான உணர்வைக் கட்டுப்படுத்தக் காரணமாக இருந்துள்ளேன் என்பதை நினைக்கும்போது கவலையாக உள்ளது. என்னுடைய மன நிலையினை வார்த்தைகளால் சொல்ல முடியாது. இனிவரும் சந்ததிக்கு இவ்வாறான அநீதி இடம்பெறும்போது, அதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பேன்,

“எனக்கு கத்னா செய்யப்பட்டது பற்றி நான் முதன் முதலில் அறிந்தபோது, நான் மிகவும் ஏமாற்றப்பட்டதாக உணர்தேன். என்னுடைய அனுமதியின்றி என் உடலில் ஏதோ ஒரு விடயம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்வது மிகவும் கடினமானதாக இருந்தது. நான் யாரின் மீது கோபப்படுவேன் என்று கூட எனக்குத் தெரியவில்லை. ஆதலால் நான் என் மீதே கோபமடைந்தேன்,” – ஆய்வாளர்

**குறிப்பிட்ட இவ்வாய்வினை முதன்மை ஆய்வாளர் ஷிரீன் அப்துல் ஷரூர் அவர்கள் ஒன்பது மாவட்ட ரீதியிலான கள ஆய்வாளர்களின் உதவியுடன் மேற்கொண்டார். சாஹிரா இஸ்மாயில், இஸ்மாயில் ஆயிஷா பானு, எ. ஆர் ஜானுஸா, அஞ்சலா சிவதிலோதமை போ(க)மன், அப்துல்லா ஹலீமா, பவுசுல் ஹிமாயா ஹாறிட், காதர் பாஷா சைபூன், கலீலுல்லா தஸ்னீமா மற்றும் நூர் மஸிய்யா ஆகியோர் கள மட்டத்திலான ஆய்வாளர்களாவர். குகநிதி குகநேசன் குறிப்பிட்ட அறிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு உதவினார்.**

# முகவுரை

அர்ப்பணிப்பு மிக்க ஒன்பது ஆய்வாளர்கள் குழுவின் உதவியுடன் எனது தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இச்செயற்பாட்டு ஆய்வானது, இலங்கையின் ஒன்பது மாவட்டங்களில் முஸ்லிம் சமூகத்தில் கத்னா எனும் பொதுவான பெயரில் செய்யப்படும் பெண்ணுறுப்புச் சிதைப்பு/வெட்டுதலின் (FGM) பிடிவாத நிலைப்பாடு குறித்தும் அதன் பாதிப்புகள் பற்றியும் விளக்கி நிற்கிறது. ஏறத்தாழ 1,000 பங்குபற்றுநர்களை ஈடுபடுத்திய இவ்வாய்வில், இச்செயன்முறையானது கலாசாரம் எனும் பெயரிலும் சமூக அனுசரிப்பிற்காகவும் மதம், நல்லொழுக்கம், துப்புரவு குறித்த கருத்துத் திரிபுகளிலும் ஆழமாக வேரூன்றிக் காணப்படுவது தெரிய வந்தது.

குறிப்பாகச் சிசுக்களையும் சிறுமிகளையும் பாதிப்பதான இந்நடைமுறையானது இரகசியமாகவும் வற்புறுத்தப்பட்டும் பிழையான தகவலிலும் முறையான சம்மதம் தெரிவிக்கப்படாமலும் மேற்கொள்ளப்பட்டு வருவதை எமது ஆய்விற் காணக் கூடியதாக இருந்தது. மனவுணர்வு அழுத்தத்தை ஏற்படுத்தி, உடல் ரீதியாகத் தீங்காக அமையும் கத்னா ஆனது பெண் பாலியல்பைக் கட்டுப்படுத்தக் கையாளப்படும் நீண்ட காலப் பாலின விதிகளுடனும் அதிகார சக்திகளுடனும் பின்னிப் பிணைந்துள்ளது. பாரம்பரியமாகக் கத்னாவைச் செய்யும் பெண்கள் (ஒஸ்தா மாமிகள்) வருமானத்திற்காக இத்தீங்குமிகு நடைமுறையைத் தொடர்ந்தும் செய்கிறார்கள். சில கிளினிக்குகளிலும் வைத்தியசாலையிலும் கத்னாவை மருத்துவ ரீதியாக்கியுள்ளனர். படித்த பெண்கள், இளைஞர்கள் மற்றும் சில முற்போக்கான மத ஆர்வலர்கள் மத்தியில் இதற்கு எதிரான செயற்பாடுகள் அதிகரித்துள்ள அதேவேளை, சமூக அழுத்தம், மதம் சார் தவறான புரிதல்கள் மற்றும் சட்ட ரீதியான தெளிவின்மை காரணமாகக் கத்னா இன்னமும் தொடரத் தான் செய்கிறது.

கத்னாவை ஆதரிப்பவர்கள் ஏனைய சத்திர சிகிச்சை நடைமுறைகளுடன் இதனை ஒப்பிட்டு இந்நடைமுறையானது மிகவும் மோசமான ஒரு விடயம் அல்ல எனும் நிலைப்பாட்டினை வலியுறுத்துகிறார்கள். இது வெறுமனே பெண் குறியின் அளவினைக் குறைத்துக் கொள்ளும் தெரிவு செய்யப்பட்டு தோல் நீக்கு முறையான ப்ளாஸ்டிக் சத்திர சிகிச்சையே என்பது அவர்களது வாதம். அத்துடன் வளர்ந்த பெண்களில் அவர்களின் சம்மதத்துடன் மட்டுமே இதனைச் செய்வதாகக் கூறிக் கொள்கிறார்கள்.

பல ஆண்களும் பெண்களும் இது குறித்து வேறுபட்ட கருத்துகளைக் கொண்டிருப்பதை இந்த ஆய்வு விளக்குகிறது. விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் கல்வி அறிவு ஊடாக இதனை இல்லதொழிக்கும் முயற்சிகளைச் சிலர் ஆதரிக்கிறார்கள். மற்றோர் பாரம்பரியம் அல்லது மதக் கடப்பாடுகள் குறித்த பொய்யான நம்பிக்கைகள் அடிப்படையில் இதனைப் பாதுகாத்து நிற்கிறார்கள். சமூகம் என்ன சொல்லுமோ எனும் பயம் பாலியல் குறித்துக் கதைக்கத் தயக்கம், பரம்பரை பரம்பரையாக நிலவும் பதற்றம் என்பவை முற்போக்கான சிந்தனைகளுக்கு மேலும் தடையாகக் காணப்படுகின்றன. ஆயினும், இச்செயற்பாட்டு ஆய்வின் மூலம், மாற்றத்திற்குச் சாத்தியமான முன் புள்ளிகளை நாம் இனங்கண்டு கொண்டோம். நாம் அணி திரட்டிய சுகாதாரப்பணித் தொழில்வல்லுநர்கள், நம்பிக்கைக்குரிய மதத் தலைவர்கள், கல்வியாளர்கள், இளம் தாய்மார் மற்றும் மிக முக்கியமாகக் கத்னாவுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் இதில் உள்ளடங்கினர்.

சட்ட மறுசீராக்கம், மத விளக்கம், சமூக அடிப்படையிலான விழிப்புணர்வு, உளவியற் சமூக ஆதரவு, சுகாதாரக் கல்வியறிவு ஆகியவை உள்ளடங்கலாகச் சிறுமிகளது பாலியலுடன் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் உரிமைகளில் முக்கிய கவனம் செலுத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட, பல்பிரிவு அணுகுமுறை ஒன்றினை நாம் பரிந்துரைக்கிறோம். கத்னா ஆனது இரகசியமாக, சமூக அங்கீகாரமாகத் தொடர அனுமதிக்கும் சமூக மரபுகளை எதிர்த்து நிற்கும் அதேவேளை, சிறுமிகளின் உடல் தனித்துவம், பாதுகாப்பு, பாலியல் நலன் குறித்த அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதனை முன்னிலைப்படுத்துவது மிக முக்கியம் ஆகும்.

நிதி மற்றும் நடைமுறை ஒத்துழைப்பு வழங்கிய கூட்டணி மேம்பாட்டு அறக்கட்டளைக்கு நன்றி தெரிவிப்பதுடன் அட்டைப்பட கார்ட்டூனுக்கு திரு. மிஃப்ராஸ் முசம்மிலுக்கும் நன்றி தெரிவிக்கிறோம்.

மாவட்ட மட்ட ஆய்வாளர்கள், வளவாளர்கள், தமது கதைகளைப் பகிர்ந்து கொண்ட துணிவுமிக்க பங்குபற்றுநர்கள், தமது வலியைப் பொருட்படுத்தாது எம்மில் நம்பிக்கை வைத்த கத்னாவிற்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். இந்த அறிக்கை உங்கள் அனைவருக்குமானது. எமது பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதியை இல்லாது ஒழிக்கும் நற்செயலுக்கு ஆதரவாக இருப்பது உங்களது குரல்களேயாகும்!.

**ஷரீன் அப்துல் சரூர்**
**(தலைமை ஆய்வாளர்)**
**ஜூன்-2025**





STEEL



# பொருளடக்கம்


1 ஆய்வின் அறிமுகம்

2 ஆய்வு முறைமை

3 ஆய்வின் பரம்பல்

4 பெண்களுக்கு விருத்த சேதனம் செய்வது யார்?

5 விருத்த சேதனம் செய்வதற்கு கூறப்படும் பொதுவான காரணங்கள்

6 பெண் விருத்த சேதனம் செய்வது தொடர்பான சாதக பாதகமான நிலைப்பாட்டின் அடிப்படைக் காரணிகள்

7 பெண் விருத்த சேதனம் செய்வதால் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள்

8 வருங்காலத்தில் மகளுக்கு விருத்த சேதனம் செய்யும் விருப்பம் உள்ளதா? இல்லையா?

9 பெண் விருத்தசேதனம் என்பது கட்டாயமான இஸ்லாமிய மத நடைமுறை என நீங்கள் எண்ணுகிறீர்களா?

10 பெண் விருத்த சேதனம் சட்டத்தால் அனுமதிக்கப்படுகிறதா?

11 கத்னா தொடர்பான பயிற்சி அதாவது கத்னா தொடர்பான நடைமுறை தொடர்தல் வேண்டுமா?

12 விருத்தசேதனம் செய்யாத பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

13 பெண் விருத்த சேதனத்தை ஒழிக்க முடியுமா?

14 பெண் விருத்தசேதனம் பற்றிய கண்ணோட்டம்

15 பெண் விருத்த சேதனம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் நடைமுறை தொடர்பாக அறிந்தோர்

16 பெண் விருத்த சேதனம் தொடர்பான தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் தாக்கம் உள்ளதா?

17 பெண் விருத்த சேதனத்தை எதிர்ப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளீர்களா?

18 பெண்கள் மற்றும் பெண்கள் உரிமைகளில் விருத்த சேதனத்தின் தாக்கம் எத்தகையது?

19 பெண் விருத்த சேதனத்தை ஆதரிப்போர் அல்லது ஊக்குவிப்போர் யார்?

20 பெண் விருத்த சேதனம் பற்றிய முடிவுகளில் ஆண்களின் பங்கு இருக்க வேண்டுமா?

21 பெண் விருத்த சேதனத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதை ஆய்வில் கலந்து கொண்டோரிடமிருந்து கேட்கப்பட்டபோது...

22 பெண் விருத்த சேதனம் தொடர்பான செயற்பாட்டைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது எதிர்கொள்ளும் சவால்கள்

23 ஆராய்ச்சியாளர்களின் பார்வைகளின் அடிப்படையில் வரம்புகள் உள்ளிட்ட அவதானிப்புகள்

24 பெண் விருத்தசேதனம் தொடர்பான நடைமுறையை நீக்குவதற்கான பரிந்துரைகள்

25 முடிவுரை

# ஆய்வின் அறிமுகம்

பெண் உறுப்பின் பகுதிகளில் சிதைப்பை ஏற்படுத்துவதனை அல்லது வெட்டுவதனை பெண் பிறப்புறுப்புச் சிதைப்பு (Female Genital Mutilation or Cut – FGMC) அல்லது பெண் விருத்தசேதனம் (Female Circumcision)அல்லது கத்னா என அழைக்கப்படுகின்றது. சில கிராமப்புறப் பகுதிகளில் தலை முழுவாட்டுதல், தொடக்குக் கழித்தல், கொள்ளருத்தல், சுன்னத்து வைத்தல் எனவும் அழைக்கின்றனர்.

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுகின்ற கிட்டத்தட்ட 998 மாதிரிகளை உள்ளடக்கிய இவ்வாய்வானது அநேகமான பெண்களையும் சில ஆண்களையும், தொழில் வாண்மையாளர்களையும் உள்ளடக்கி உள்ளது. சகோதர மதத்தில் உள்ள ஒரு சில துறைசார்ந்த நிபுணர்களை இவ்வாய்வு உள்வாங்கியுள்ளது. இது முஸ்லிம்களின் பல சமயப் பிரிவுக் கொள்கைகளையும் உள்வாங்கியுள்ளது. குறிப்பாக தப்லிக், ஜமாத்தே இஸ்லாமி மற்றும் தௌஹீத் பிரிவினரிடையேயும், வேற்று மதத்திலிருந்து புதிதாக இஸ்லாத்திற்குள் உள்நுழையும் பெண்களிடையேயும் கத்னா எனக் குறிப்பிடப்படுகின்ற பெண் விருத்தசேதனம் தொடர்பான கருத்துகள், நடைமுறைகள் தொடர்பான நேர்காணலின் பதில்களின் சுருக்கம் மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றை இவ்வாய்வறிக்கை கொண்டுள்ளது. இதுமக்கள் தொகை விபரங்கள், தெளிவுபடுத்தல், விழிப்புணர்வு, நடைமுறை பற்றிய உண்மை மற்றும் தனிப்பட்ட தொழில்முறை சார்ந்த மற்றும் குழுக்களுடனான கலந்துரையாடல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

குறிப்பிட்ட நடைமுறை தொடர்பாக முஸ்லிம் சமூகப் பெண்களது புரிதல் மற்றும் அச்செயற்பாட்டின் பின்னணியில் உள்ள காரணங்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரிடையே இந்நடைமுறையின் பரவல் அல்லது தாக்கம் ஆகியவற்றை அளவிடும் முயற்சியோடு, பெண் பிள்ளைகளது எதிர்கால பாலியல் உரிமை, உடல் மற்றும் உள ரீதியான நலன்கள் தொடர்பாக அளவிடும் முயற்சியில் குறிப்பிட்ட ஆய்வானது இலங்கையின் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கின்ற மாவட்டங்கள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வை மேற்கொண்டவர்கள் பாதுகாப்பான முறையிலும், தமக்கு அறிமுகமுள்ள கிராமங்களைத் தெரிவு செய்தும் குறிப்பிட்ட ஆய்வினை மேற்கொண்டனர்.

# ஆய்வு முறைமை

குறிப்பிட்ட பெண் விருத்தசேதனம் (கத்னா) தொடர்பான ஆய்வு ஒன்பது மாவட்ட மட்டங்களில் ஒன்பது உதவி ஆய்வாளர்களால் குறிப்பாக முஸ்லிம் மக்கள் செறிந்து வாழ்கின்ற இடங்களில் பெண் செயற்பாட்டாளர்களால் அவர்களது செயல்வாதத்தின் ஒருபகுதியாக மேற்கொள்ளப்பட்டது. ஆய்விற்காக மூன்றிற்கும் மேற்பட்ட சந்திப்புகளை நடாத்திப் படிமுறை தயார் செய்யப்பட்டது. இது உணர்வு ரீதியானது மட்டுமல்ல குறிப்பிட்ட விடயம் தொடர்பாகக் கதைப்பது கூடக் கடினமாகையால் குறிப்பிட்ட ஒன்பது உதவி ஆய்வாளர்களும் தமக்கு இயலுமையான சௌகரியமான இடங்களில் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். கலந்துரையாடலின்போது இரு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அதாவது இஸ்லாமிய மதத்தில் உள்ள முதன்மை மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் அல்ஹதீஸ் (சுன்னா) என்ன சொல்கின்றது என்ற தெளிவு வேண்டும் என்றும், உள்ளூர் மட்டத்தில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை அடையாளப்படுத்த வேண்டும் என்ற விடயமும் முக்கியம் பெற்றது.

பெண் விருத்தசேதனத்திற்கும் (கத்னாவிற்கும்) பெண்களது உடல் ஆரோக்கியத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி இலங்கை மருத்துவ சங்கத்தின் மருத்துவர் ஷமூன் மர்லின் அவர்கள் தெளிவுபடுத்தினார். அத்தோடு கள மட்டத்தில் உதவி ஆய்வில் பங்கு கொண்டவர்கள் கத்னா பற்றிய விளக்கத்தைப்; பெற்றுக் கொண்டதன் பின்னர் தமக்கும் கத்னா செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொண்டனர். இதனால் சிலர் மன உளைச்சலுக்கு உள்ளாகினர். அவர்களுக்கு உள வள ஆலோசனையை உள வள நிபுணர் சுகைலாவும், அவரது குழுவும் வழங்கியது. ஆய்வு நடவடிக்கைகளின் இறுதிவரை உதவி ஆய்வாளர்கள் எவராயினும் மனதளவில் பாதிப்படையும் தருணத்தில் மேற்குறிப்பிட்ட உள வளக் குழுவின் மூலம் உள வள ஆலோசனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கலாநிதி ரவூவ் ஹூசைன் (மார்க்க அறிஞர்) அவர்கள் பெண் விருத்தசேதனம் (கத்னா) பற்றி அல்குர்ஆன் மற்றும் ஹதீசில் ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும் உரையாடினார். அத்துடன் அவர் இஸ்லாமிய விளக்கம் சார்ந்து வழிகாட்டல் பிரசுரம் ஒன்றையும் கள மட்ட ஆய்வாளர்களுக்குத் தயாரித்து வழங்கினார்.

கள உதவி ஆய்வாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட குழுவுடன் தொடர்ந்து உரையாடும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. உதவி ஆய்வாளர்கள் ஆழமான கலந்துரையாடலின் பின்னர் எப்பகுதிகளில் இவ்வாய்வை செய்ய முடியும் என முடிவெடுத்தார்கள். முதன்மை ஆய்வாளர் மூலம் கேள்விக் கொத்துத் தயாரிக்கப்பட்டது.

இலங்கையில் பெண் விருத்தசேதனம் தொடர்பான ஆய்வு மிக அரிதாகவே உள்ளது. இருப்பினும், இலங்கை முழுவதிலும் முஸ்லிம் சமூகத்தினரிடையே கத்னாவின் பரம்பல் பற்றிச் செய்யப்பட்ட ஆய்வு எதுவும் இதுவரையிலும் பிரசுரிக்கப்படவில்லை. எனினும் 20 வாக்கு மூலங்கள் கொண்ட ஆதாரங்களுடன் போரா (Borah) சமூகத்திற்கிடையே (இலங்கை) குடும்பக் கட்டுப்பாட்டு மையத்தினூடாகச் (SLFPA)செய்யப்பட்ட ஆய்வினையும், இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கான பிரிவினாலும் ((UN Women) அதன் மக்கள் தொகை நிதியத்தாலும், (UNFPA) முஸ்லிம் மக்களிடையே செய்யப்பட்ட ஆய்வினையும் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் இரண்டாம் நிலை ஆய்வை முதன்மை ஆய்வாளர் செய்திருந்தார்.


பின்னர் ஆய்வாளர்களுக்குக் குறிப்பிட்ட இரண்டாம் நிலை ஆய்வினை விளக்கியதோடு, அதனைத் தொடர்ந்து கேள்விக் கொத்தானது பல தடவைகள் சரி பார்க்கப்பட்டது. குறிப்பாகக் கேட்கப்படுகின்ற கேள்விகள் எக்காரணம் கொண்டும் ஆய்வுக்கு உட்படுத்துவோரை அசௌகரியப்படுத்தாமலும், தனிப்பட்ட ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருப்பதற்காக இம்முறைமை பின்பற்றப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய உதவி ஆய்வாளர்கள் தமது Gantt chat இனைத் தனித்தும் இணைந்தும் தயாரித்தார்கள். இதன் ஊடாகத் தாம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாதிரி இடங்களையும் யாரை ஆய்வு செய்ய வேண்டும் என்ற விடயத்தையும் ஆய்வாளர்கள் முடிவு செய்தனர்.


ஆரம்ப கட்ட ஆய்வு நடவடிக்கைகளுக்கு முதன்மை ஆய்வாளர் உதவியுடன் மாதிரி ஆய்வு இடம்பெற்றது. பெண் விருத்தசேதனம் (கத்னா) தொடர்பான ஆய்வு ஒன்பது மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் நடாத்தப்பட்டது. இவ்வாய்வு எட்டு மாதங்களாகப் பல சவால்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டது. Snowballing ஆய்வு முறைமையின் படி மாதிரிகளானவை கத்னாவை ஆதரிப்பவர்கள், அதைச் செய்பவர்கள் குறிப்பாக ஒஸ்தா மாமிமார் மற்றும் மருத்துவர்களை அடையாளப்படுத்த ஏதுவாக இருந்தது.

இவ்வாய்வுக் குழுவானது இரண்டு தரம் தொடர்ச்சியாக மூன்று அல்லது நான்கு நாட்கள் தாங்கள் சேகரித்த தரவுகளை ஆய்வு செய்தும், துறைசார் நிபுணர்களுடன் உடல் உள நலம் சார்ந்தும், தகவல் தந்தோருக்குமான உடல் உள நலன் சார்ந்தும் ஆலோசனைகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.


# ஆய்வின் பரம்பல்




படம் **1.1** மாவட்டம் மற்றும் வயது அடிப்படையில் பிரிக்கப்பட்ட நேர்காணல் செய்யப்பட்ட நபர்கள்




படம் **1.2** பாலினம் அடிப்படையில் பிரிக்கப்பட்ட நேர்காணல் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை




படம் **1.3** தொழில் வாரியாகப் பிரிக்கப்பட்ட நேர்காணல் செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை

# பெண்களுக்கு விருத்த சேதனம் செய்வது யார்?

சில பிரதேசங்களில் 'ஒஸ்தாத் மாமி” என்றும் வேறு சில பிரதேசங்களில் 'ஒய்த்தா மாமி, ஒய்த்தாம்மா, மருத்துவச்சி, நாசுவத்தி, தொடக்கு முடிவெட்டும் உம்மா, நாசுவரி, அம்பட்டமாமி, வயதான மூமா, நாவிதர் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சந்ததி வழியாக இதே தொழிலைச் செய்து வருகின்றார்கள். இவர்கள் வயதானவர்களாகக் காணப்படுகிறார்கள். மன்னாரில் உள்ள ஒஸ்தா மாமிக்கு 62 வயதாகக் காணப்படுகிறது. பொலநறுவையில் உள்ள ஒஸ்தாத் மாமிக்கு 67 வயது. அவர் திருகோணமலைப் பிரதேசத்திலிருந்து வந்து இங்கு திருமணம் செய்து வாழ்கிறார். 23 வருடமாக அவரின் தாயார் பாவித்த அதே சவரக் கத்தியையே தானும் இன்றுவரை பாவித்து வருகிறார் (35 வருடத்திற்கு அதிகமாக ஒரே கத்தி) காலி மாவட்டத்தில் கத்னா செய்பவரை நாசுவதி என்றே அழைக்கின்றனர். இங்கு ஒஸ்தாமாமி என்பவர் அல் குர்ஆன் ஓதப் பழக்குபவரேயாவர். அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒஸ்தா மாமிக்கு 80 வயது. அவருக்கு இஸ்லாமியத் தாதி ஒருவர் உதவி செய்கிறார். குறிப்பிட்ட ஒஸ்தா மாமி பழைய சவரக் கத்தியைப் பயன்படுத்தியபோது மேற்குறிப்பிட்ட தாதி சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தும் பிளேட்டை அதற்கு மாற்றீடாகக் கொடுத்துள்ளார். ஒலுவில் பிரதேசத்தில் 65 வயதையுடைய ஒஸ்தா மாமியும் சம்மாந்துறையில் 59 வயதான ஒஸ்தா மாமியும் தொடர்ந்து கத்னா செய்து வருகிறார்கள்.

இவர்களது வாழ்வாதாரம் கத்னா செய்வதால் பெறப்படுகின்றது. இவர்கள் 5000 ரூபா தொடக்கம் 7000 ரூபா வரையிலான பணம் மற்றும் அரிசி, சேலை, பழங்கள் போன்றவற்றை அதற்கு ஊதியமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். வதிவிட தூரங்களுக்கு ஏற்ப இதனுடன் போக்குவரத்துச் செலவும் வழங்கப்பட வேண்டும். குறிப்பிட்ட ஒஸ்தா மாமிகளுக்கு கத்னா செய்வதற்கான அனுபவம் அவர்களது பாரம்பரியத் தொழில் அனுபவத்தினூடாகவே வருவதாகவும் பயிற்சிகள் பெற்றதில்லை எனவும் அறிய முடிந்தது. எனினும் கொழும்பு மாளிகாவத்தை பகுதியில் ஒஸ்தா மாமிகளுக்கான பயிற்சி வழங்கப்படுவதாக செவிவழித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒஸ்தா மாமிமாரை ஒருபோதும் வீடுகளுக்குள் சாதாரணமாகப் பழகுவதற்கு அழைக்கப்படுவதில்லை. ஆனால் நடைமுறையின்போது கட்டாயம் வரவழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்குச் சமூகத்தில் அந்தஸ்து இருப்பதாகத் தெரியவில்லை. சமூக மட்டத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவே இப்பரம்பரையினர் காணப்படுகின்றனர். இருப்பினும், அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒஸ்தா மாமிகள் தம்மை அந்தஸ்து அதிகம் கொண்டவர்களாக குறிப்பிடுகின்றனர். தாம் ஆதாம், ஹௌவா பரம்பரை போலவே ஆணியின் நூலில் இருந்து இறக்கப்பட்டோர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர். இச்சடங்கு பெரும்பாலும் வயதான பெண்களை உள்வாங்கிய செயற்பாடாகவே இருப்பதனாலேயே இவை இன்னும் இரகசியமான முறையில் தொடர்ச்சியாகவே வழக்கில் இருக்கின்றது என்றும் சொல்லலாம். தற்காலத்தில் உள்ளூர் மற்றும் தனியார் கிளினிக்குகளில் இந்நடைமுறையைச் செய்யும் முஸ்லிம் மருத்துவர்கள் இருப்பதாக ஒப்புக்கொண்டனர்.

பெண்ணொருவர் தனது மகளுக்கு விருத்தசேதனம் செய்த கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட மருத்துவர் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு தனது பேத்திக்கும் கத்னா செய்தார் எனக் குறிப்பிட்டார். அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒஸ்தா மாமி கிட்டத்தட்ட 5000 பெண் குழந்தைகளுக்குக் கத்னா செய்துள்ளார் என அறிய முடிந்தது. பொலன்னறுவையில் உள்ள ஒஸ்தாத் மாமி மாதத்திற்கு 5 இலிருந்து 10 வரையான குழந்தைகள் என்ற கணக்கின்படி 23 வருடங்களாக கத்னா செய்து வருகிறார்.

குழந்தை பிறந்து ஏழு அல்லது நாற்பதாம் நாள் இச்செயற்பாடு செய்யப்படுவதால் தாயின் சம்மதம் அதிகளவில் பெறப்பட்டதாக தெரியவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் குழந்தையின் தாயை முழுக வைப்பதற்கு அல்லது குழந்தை பெற்ற பெண்ணிற்குத் தொடக்கு முழுக்கு அல்லது நாற்பது முழுக வைத்தல் எனப்படும் வெந்நீர் மூலிகைக் குளிப்பாட்டுதலுக்குக் கொண்டு சென்று விடுவார்கள். ஆண்கள் குறிப்பிட்ட சமயம் அவ்விடத்தில் இருப்பதில்லை. சில இடங்களில் தகப்பன் இருந்தாலும் ஒஸ்தா மாமியோ அல்லது கூட நிற்கும் நெருங்கிய உறவுப் பெண்களோ அவர்களை அகன்று சென்றுவிடுமாறு கூறி அகற்றிவிடுவார்கள். இதனால் இந்நிகழ்வு அதிக சந்தர்ப்பத்தில் குழந்தையின் பெற்றோரின் சம்மதம் இன்றி மூத்தோர் விருப்பிற்கேற்ப அவர்களது கட்டளைக்கு அமைவாகவே இடம்பெறுகின்றது. பல சந்தர்ப்பங்களில் பெண்களின் தாய்மார் மற்றும் கணவரின் தாய், சகோதரிகள் போன்றோர் கத்னா செய்யுமாறு வற்புறுத்துவதை ஆய்வுக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் காண முடிந்தது.

பெண் குழந்தை பிறந்த ஏழாம் நாள் அல்லது நாற்பதாம் நாளில் பெரும்பாலும் முடி நீக்கம் செய்து, குளிப்பாட்டி, புத்தாடை அணிவித்து இச்சடங்கிற்குக் குழந்தையைத் தயார்ப்படுத்துகிறார்கள். குழந்தையின் தாயின் தாய் அல்லது தந்தையின் தாய், தந்தையின் சகோதரி போன்ற பெண்களில் ஒருவர் வெள்ளைத் துணி விரித்த பித்தளை வட்டாவின் மீதும் சில இடங்களில் உரலின் மீதும் உட்கார வைத்து குழந்தையின் பிஞ்சுத் தொடைகளை அகலப் பிடிக்க 'ஒய்த்தா மாமி” குழந்தையின் பிறப்பு உறுப்பில் கூரிய சவரக் கத்தி அல்லது பிளேட் அல்லது சத்திர சிகிச்சைக் கத்தி ஆகியவற்றின் ஒன்றால் இரத்தம் கசியக் கீறிய பின்னர் குறிப்பிட்ட பகுதியில் வெளிவரும் இரத்தத்தைப் பஞ்சினால் தொட்டு அருகில் இருப்பவர்களுக்குக் காட்டுவார். அவர்களைப் பொறுத்தவரையில் இது ஒரு மிக முக்கியமான மதப் பண்பாட்டுக் கடமைகளில் ஒன்றாகும். இதனை இஸ்லாத்திற்கு எடுத்தல் எனக் கூறுவார்கள். பெண்கள் “பாலியல் ஒழுக்கம்” மிக்க பெண்களாக வளரவும் வாழ்வதற்கும் தாம் அடித்தளமிட்டுள்ளார்கள் எனக் களிப்புறுகின்றனர்.

வேற்று மதத்தில் இருந்து இஸ்லாத்தைத் தழுவியோர் மற்றும் சிறுவயதில் கத்னா செய்யத் தவறியோர் போன்றோர் வயது வேறுபாடின்றிக் கத்னா செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். போரா (Bohra) பிரிவினர் ஏழு அல்லது எட்டு வயதிற்குப் பிறகே கத்னா செய்கின்றனர். ஆய்வை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் தப்லிக் பிரிவினர் கத்னா செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். தவ்ஹீத் பிரிவினர் கத்னா தொடர்பாகச் செயற்படுவதில் ஆர்வம் குறைவாகவே உள்ளதோடு கத்னாவைச் செய்யாதும் தவிர்க்கின்றனர். மன்னார் மாவட்டம் தம்பட்ட முசலிப் பகுதியில் அநேகமானோர் கத்னாவைப் பின்பற்றுகின்றனர். ஆனாலும் மன்னார் நகரைப் பொறுத்தவரை படித்த பல்கலைக்கழகம் சென்ற பெண்கள் கத்னா செய்வது உரிமை மீறல் என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

புத்தளம் பிரதேசத்தில் இஸ்லாமிய மதத்தைத் தழுவிய பெண்கள் கத்னா தொடர்பாக உரையாடும்போது, தமது வேதனைகளையும் மழுங்கடித்துக் கொண்டு கத்னாவை ஆதரித்து வாதாடினார்கள். காலி மாவட்டத்தில் நாவின்ன எனும் பகுதியில் கத்னா செய்வது மிகவும் அதிகமாக உள்ளது. பொலன்னறுவை பகுதியில் கத்னாவிற்குப் பயன்படுத்தும் கத்தியானது 35 வருடம் பழமையானதாகவும், ஒரு தடவை பயன்படுத்திய பின்னர் அதனை மீண்டும் கடையில் கொடுத்து கூர்மையாக்கிச் (தொவைந்து) சுடுநீரில் சுத்தப்படுத்தி மீண்டும் பாவிப்பதாக குறிப்பிட்டனர். குறித்த கத்தியைத் தொட்டுணர்ந்தபோது துருப்பிடித்த நிலையில் கூர்மையற்றதாகக் காணப்பட்டது. மன்னார்ப் பகுதியில் சத்திர சிகிச்சை பிளேட்டினால் ஒஸ்தா மாமி கத்னா செய்கிறார். சத்திர சிகிச்சை பிளேட்டினை ஒஸ்தா மாமி கொண்டு வருவார். அதற்கான செலவை அவருக்குக் கத்னா செய்வோர் கொடுத்தல் வேண்டும்.

மன்னார் மாவட்டம் எருக்கலம்பிட்டிப் பகுதியில் பெண் குழந்தைக்குக் கத்னா செய்யும்போது நெருங்கிய சொந்தங்கள் ஒன்று சேர்ந்து விழாப் போலவே கொண்டாடுகிறார்கள். ஒஸ்தா மாமிக்கு அரிசி, தேங்காய் மற்றும் சேலை போன்றவற்றோடு அவரது ஊதியம் தவிர, வருகை தந்துள்ள நெருங்கிய உறவுகள் அவருக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டி உள்ளது. ஏனெனில் எப்போதாவது ஒரு தடவையே இந்நிகழ்வு இடம்பெறுவதன் காரணமாகத் தமக்கு உதவுமாறு குறிப்பிட்ட ஒஸ்தா மாமி உறவினர்களிடம் நேரடியாகவே கோரிக்கை விடுவது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை கந்தளாய் பகுதியிலும் பொலன்னறுவை தம்பாளைப் பகுதியிலும் ஒஸ்தா மாமிமாரை கத்னா செய்வதற்காக நாடுவது குறைவாகவே உள்ளது. அவர்கள் கேட்கும் உயர்வான ஊதியம் காரணமாகவே அழைக்கப்படுவது அருகி வருகின்றதாக அறிய முடிந்தது.

மட்டக்களப்பு ஓட்டமாவடிப் பகுதியில் இருக்கின்ற ஒஸ்தா மாமி கத்னா செய்வதற்கு வேறு ஊர்களுக்கும் சென்று வருகிறார் (பொலன்னறுவை தம்பாளை பகுதிக்கும்). அவருக்கு அவரது ஊதியமாக 4000 ரூபாவும் அது தவிர போக்குவரத்துச் செலவும் கொடுக்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட ஊருக்கு அவர் செல்லும்போது அங்கே அவரது வசதி கருதி கத்னா செய்ய வேண்டிய குழந்தைகள் பலரை ஒன்று சேர்த்த பின்னரே சென்று கத்னா செய்கிறார். இதனால் அவருக்கு குறிப்பிட்ட ஒரே தடவையில் ஒரு தொகைப் பணத்தைப் பெற முடிகிறது. இவர் அண்மையில் ஹஜ் கடமையை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகரப் பகுதியை எடுத்துக் கொண்டால் கத்னா தொடர்பான செயற்பாடு சமூக ஊடக விளம்பரப்படுத்தல் மூலமாக இடம்பெறுகிறது. அதாவது முகப்புத்தகத்தினூடான வலையமைப்புச் செயற்பாடாகவும் கத்னா செய்வதைக் காண முடிந்தது. குறிப்பிட்ட முகப் புத்தகப் பதிவிலே தனியார் வைத்தியசாலை ஒன்றின் தொலைபேசி இலக்கமும் காணப்பட்டது. அதிலே கத்னா செய்பவர்களது விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக. islamq&a (ஆதாரம் 1 இல் இணைக்கப்பட்டுள்ளது) என்ற முகப்புத்தகத்தின் ஊடாகத் தொடர்பை ஏற்படுத்தி விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். தொடர்பை ஏற்படுத்திக் கத்னா செய்வதற்கான விபரங்கள் பெறப்பட்டபோது, தேவை நாடி வாழும் பிரதேசத்திற்கு ஏற்பவே கொடுப்பனவு நிர்ணயிக்கப்படுகின்றது. வெள்ளவத்தை எனும்போது 5000 ரூபாவும் கொள்ளுப்பிட்டி எனும்போது 7500 ரூபாவும் என அவர்களது வேதனம் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. இதனுடன் அவர்களது போக்குவரத்துச் செலவும் தனியாக வழங்கப்படல் வேண்டும்.

கிராமப் பகுதி போல அல்லாமல் கொழும்பில் கத்னா செய்யும் வழக்கம் நவ நாகரிகத்திற்கு ஏற்ப வளர்ச்சி கண்டுள்ளது. சமூக ஊடக விளம்பரப்படுத்தல் மாத்திரமன்றி கத்னா செய்யும் ஒஸ்தா மாமி கத்னா செய்ய வரும்போது கையில் ஒரு வடிவமைக்கப்பட்ட பொதியுடன் வருகிறார். அதிலே குழந்தைக்கான Diaper, ஒசுசல அரச மருந்தகத்தில் விற்கப்படும் பஞ்சு, இயற்கையான தேன், டீபை razer, Tissue போன்ற பொருட்கள் அப்பொதியில் அடங்கும். கத்னா செய்யப்பட்டதன் பின்னர் குழந்தை அழும்போது அதன் சிந்தனையைத் திசை திருப்பவே தேனை நாக்கிலும் காயத்திலும் தடவுகிறார்கள். இக்கத்னா செய்யும் செயற்பாட்டை நகரப் பகுதியில் சிலர் கொண்டாட்டமாகச் செய்தும் மகிழ்கிறார்கள்.

கத்னா செய்வது தொடர்பாக முகப்புத்தகத்தில் காணப்பட்ட தனியார் வைத்தியசாலையின் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பை ஏற்படுத்தி பெண்களுக்கு கத்னா செய்வது தொடர்பாக பெண் ஒருவர் வினாவியபோது அவர்கள் ஆண்களுக்கான சுன்னத்தை மாத்திரமே செய்வதாகக் குறிப்பிட்டனர். அதே குறிப்பிட்ட இலக்கத்திற்கு இஸ்லாமிய ஆண் சட்டத்தரணி ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது மூத்த மகளுக்குக் கத்னா செய்ய வேண்டும் என வினவியபோது, அவரது மகளைக் கண்டி நகரத்திற்கு அழைத்து வருமாறும், அவ்வாறு வந்த பின்னர் மீண்டும் தொடர்பை ஏற்படுத்துமாறும், அப்போதே தமது சேவை நிலையம் தொடர்பான விபரங்களைச் சொல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கத்னாவின் பின்னரான பின் அவதானிப்பு பற்றி ஒஸ்தா மாமிமார் கவனத்தில் கொள்வதில்லை. ஆகவே அவர்களுக்குக் கிருமித் தொற்றுப் பற்றியோ அல்லது இவ்விடயம் பெண்களின் பாலியல் உரிமை சார்பானது என்பது பற்றியதான தெளிவோ இருக்கவில்லை. அவர்கள் இது கட்டாய மதக் கடமை எனக் கூறுகின்றனர். ஏனெனில் பெண் விருத்தசேதனம் செய்ய முன்னர் கலிமா ஓதுகின்றனர். கத்னாவைச் செய்த பின்னர், ஒஸ்தா மாமி குறிப்பிட்ட இடத்தில் வெளிவருகின்ற குருதியைப் பஞ்சில் தொட்டு அருகில் இருப்போரிடம் 'ஈமான் கொண்டாயா?" என மூன்று தடவைகள் கேட்கிறார். அதற்கு குழந்தையைப் பிடித்தவாறு இருப்போர் மூன்று தடவைகள் “ஆம்” எனக் கூறுதல் வேண்டும். இது பெண் விருத்த சேதனம் செய்யும் விடயமானது மதத்துடன் சேர்ந்த (இஸ்லாத்திற்கு எடுத்தல்) விடயமாகக் கொள்ளும் தன்மையினை வெளிக்காட்டுகிறது. இவ்வாய்வின் ஊடாக கிராம மற்றும் எப்பகுதியிலும் உள்ள ஒஸ்தா மாமிமார் கத்னாவை மதக் கடமை என வலியுறுத்துவதோடு, அதனை செய்யுமாறு ஊக்குவிப்பது மட்டுமன்றித் தமது செயலை நியாயப்படுத்தவும் செய்கின்றனர்.

தற்காலத்தில் ஒஸ்தா மாமிமார் தமது ஊதியம் தொடர்பாகவும் போக்குவரத்துச் செலவு தொடர்பாகவும் அதிகளவில் பணம் கேட்பதால் கத்னா செய்யும் வழக்கம் சில பிரதேசங்களில் குறைவதாக அறிய முடிந்தது. இவர்கள் கை வைத்தியம் பார்க்கும் வழக்கமுடையவர்களாக (மன்னார்ப் பகுதியில்) காணப்படுகிறார்கள். சிலர் மருத்துவர்களைக் கொண்டு கத்னா செய்வதால் ஒஸ்தா மாமிமார் அழைக்கப்படுவது மருகி வருகின்றது. குறிப்பிட்ட ஒஸ்தா மாமிமாருக்குக் கத்னா செய்வது இலங்கையில் குற்றமான ஓர் செயல் என்ற சட்டம் தொடர்பான விளக்கம் தெரிவதில்லை.

ஆண்களுக்குத் தெரியவே சில இடங்களில் இவ்விடயம் நிகழ்கின்றது. ஏனெனில் கத்னாவிற்கான செலவை ஆண்களிடம் இருந்தே பெண்கள் பெறுகின்றனர். ஆகவே அநேகமாக ஆண்களும் இவ்விடயத்தை அறிந்திருக்கிறார்கள் எனக் கொள்ள முடியும்.

பெண் விருத்தசேதனம் செய்வதால் பிள்ளையின் பிறப்புறுப்புச் சேதம் ஏற்படுகின்றதல்வா? என வினாவப்பட்டபோது ஒஸ்தா மாமிமார் "அது லேசாக மேல் தோலைக் கீறிவிடுவது" எனவும், "இஸ்லாத்தைச் சேர்ந்த மருத்துவர் (பொலன்னறுவை - சுங்காவிலைச் சேர்ந்தவர்) குறிப்பிடுகையில் "கத்னா செய்ய வேண்டும் எனவும், நான் ஒரு வைத்தியராக இருந்தாலும் மதம் என்று வரும்போது, அதற்குத்தான் நான் முன்னுரிமைப்படுத்துவேன் என்கிறார். அவரிடம் "யாரால் எந்தக் ஹதீஸில் குறிப்பிடப்படுகின்றது?" என வினவியபோது "அது பற்றி நான் ஆராயவில்லை" என்றும், "சிறிய கத்தியை வைத்து இலேசாக ஒரு கீரல் மட்டும் தானே?" எனவும் கூறினார். "உதாரணமாக கையில் தோலில் ஒரு கீரல் பட்டால் லேசாக இரத்தம் வரும். பின்பு காய்ந்துவிடும் அவ்வளவுதானே?" என்று விளக்கம் கொடுத்தார். மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது யாதெனில் இவ்வைத்தியர் கத்னா செய்வதற்கு இருக்கும் குழந்தையைத் தனது மனைவியிடம் கொடுத்து கத்னாவைச் செய்து வரும்படி பணிப்பார். இதற்காக 3000 ரூபா தொடக்கம் 4000 ரூபா வரையான பணம் வசூலிக்கப்படுகின்றது. இவ்வைத்தியரின் மனைவி ஒரு மருத்துவரோ அல்லது பாரம்பரியமாக கத்னா செய்யும் ஒஸ்தா மாமியோ அல்லர்.

மன்னார் மாவட்டத்தில் இச்சடங்கைச் செய்யும் பெண் குறிப்பிடுகையில் அவருக்குத் தற்போது 62 வயது எனவும் தான் இச்சடங்கை 22 வயதில் செய்யத் தொடங்கியதாகவும், எனினும் கடந்த 10 வருடங்களாக கத்னா செய்வது மிகவும் குறைந்துள்ளது எனவும், கடந்த 3 மாதங்களாக யாருக்கும் கத்னா செய்யவில்லை எனவும், தற்போது கத்னா செய்வது நூற்றிற்கு 70 வீதமாகக் குறைவடைந்து விட்டது எனக் கவலை வெளியிட்டார். எனினும், இது இஸ்லாத்தில் கட்டாயமானதொரு மதக் கடமை எனவும் குறிப்பிட்டார். பொலன்னறுவை ஒஸ்தாத் மாமி குறிப்பிடுகையில் தனக்குப் பின்னர் கத்னா செய்யும் பயிற்சியை மேற்கொள்ள தனது வாரிசுகள் விரும்பவில்லை எனவும் அதனால் தன்னுடனேயே இப்பயிற்சி செய்யும் செயற்பாடு முடிவடைந்துவிடும் எனவும் வருத்தத்துடன் தெரிவித்தார்.

# விருத்த சேதனம் செய்வதற்கு கூறப்படும் பொதுவான காரணங்கள்

ஆய்வில் கலந்து கொண்டோரில் கத்னாவை ஏற்றுக் கொண்டவர்கள் இந்நடைமுறையானது இஸ்லாத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு முக்கியமான விடயமாகவும், பிறந்த பெண் குழந்தையை கத்னா செய்வதன் மூலமே இஸ்லாத்திற்குள் உள்ளீர்ப்பதாகவும் கருதுகின்றனர். அத்தோடு 'குழந்தையை சுத்தப்படுத்தல்' (இஸ்லாத்திற்கு எடுத்தல்) எனவும் கூறப்படுகின்றது. ஆண்களுக்கு சுன்னத் செய்வது போலவே இது பெண்களுக்கு செய்யப்படுவதாகவும் கலாசார மரபுகள் மரபுத் தொடர்சியினைப் பின்பற்றுவதோடு, இக்கடமையை நிறைவு செய்வதன் மூலம் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதாக அர்த்தம் எனவும் குறிப்பிட்டனர்.

நாம் முஸ்லிம்கள் என்பதற்கு குறிப்பிட்ட இச்செயற்பாடு ஆதாரமாக அமைகிறது என்பதோடு, சிறுநீரக மற்றும் கிருமித் தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறமுடிகிறது எனவும் திருமணத்தின் பின்னரான வாழ்க்கையிலும், மகப்பேற்றின் போதும் இலகுவாக அமையும் எனவும் நம்புகின்றனர். மேலும் பெண்களின் கண்ணியத்தையும் அவர்களின் பாலியல் வரம்புகளை கட்டுப்படுத்திக் கட்டுப்பாடான சீரான வாழ்க்கைக்கு கத்னா வழிவகுக்கும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

மரபுசார் தொடர்ச்சியாக இது காணப்படுவதால் சமூக அழுத்தம் இங்கு பாரிய செல்வாக்கு செலுத்துகிறது. பெண் விருத்தசேதனம் மூலம் அதாவது கத்னா எனும் சடங்கினால் பாலியல் ஒழுக்கம் தொடர்பான "நன்மைகளை" நிலைநாட்டிவிட முடியும் என்பதே கத்னாவை ஆதரிப்போரது நம்பிக்கை ஆகும்.
இஸ்லாத்தைத் தழுவிய நபர் ஒருவரிடம் கத்னா தொடர்பாக வினவியபோது ஆத்திரமும் குழப்பமும் அடைந்தார்.

- "நிச்சயமாக, எல்லோரும் கத்னா செய்திருக்கிறார்கள். இல்லையெனில் நாம் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது" எனவும் குறிப்பிட்டார்.

- "கத்னா செய்தால் நல்லது. இல்லையெனில் கூடுதல் தோல் வளர்ந்து கடினமாகிவிடும். இதனால் பெண்கள் உட்காருவதற்கு மிகவும் சிரமப்படுவார்கள். வளர்ந்தால் பூச்சிகள் கடிப்பது போன்ற உணர்வு ஏற்படும். அதனாலேயே நாங்கள் கத்னா செய்கிறோம்."

- "நாம் கத்னா செய்யவில்லை என்றால், தோல் சுருக்கமாகிவிடும்."

- "பொதுவான காரணம் தூய்மை. ஒரு பெண் சிறுநீர் கழிக்கும்போது, அது சிறுநீர் சேகரிப்பதை நிறுத்துகிறது."

- "பெண்கள் பாடசாலைகளில் வேலை செய்வதை நான் கவனித்தேன். பெண்கள் ஏனைய பெண்களுடன் பாலியல் உணர்வுகளை வளர்க்கத் தொடங்குகிறார்கள். எனவே நாம் அவர்களைத் தடுக்க இது ஒரு வழியாகும். ஒரு பாலியல் இயல்பு நிலையை நாங்கள் கத்னா செய்வதன் மூலம் வலியுறுத்துகிறோம்."

# பெண் விருத்தசேதனம் செய்வது தொடர்பான சாதக, பாதக நிலைப்பாட்டின் அடிப்படை காரணிகள்

ஆய்வில் கலந்து கொண்டோரில் பெண் விருத்த சேதனம் செய்வதால் பெண்களுக்கு மற்றும் குடும்பத்திற்கு மற்றும் சமூகத்திற்கு அதிகளவு நன்மைகள் ஏற்படுவதாக எடுத்துக் கூறினர். பெண்களின் உணர்ச்சியை கட்டுப்படுத்துவதனால் தவறான தொடர்புகளிலிருந்து பாதுகாக்கப்படுவர் எனவும் தங்களது பெண் பிள்ளைகள் இஸ்லாத்தைப் பின்பற்றி ஒழுக்கமாக வளர்வார்கள் எனவும் மார்க்க ரீதியாகச் சொர்க்கம் கிடைக்கும் எனவும் திருமணத்திற்கான சமூக அங்கீகாரம் கத்னா மூலமே பெறப்படுவதாகவும் சமூகத்தினரிடமிருந்து ஒருவித மதிப்பு அல்லது அந்தஸ்து கிடைக்கும் எனவும் மகப்பேற்றின் போது சிக்கல்களைக் குறைக்கும் எனவும் நம்புகின்றனர்.

அனர்த்தம் அல்லது விபத்துகளில் பெண்கள் இறக்கும் சந்தர்ப்பங்களில் அவர்கள் எந்த சமயம் என்று கண்டுபிடிப்பதற்கு இந்த நடைமுறை இலகுவாக இருக்கும் எனவும் எமது மார்க்கத்தில் உள்ள பெண்களின் ஒழுக்கத்துக்காகவும் தூய்மைக்காகவும் கத்னா செய்யப்படுகிறது எனவும் பெண்களுக்குக் கத்னா செய்வதனால் ஆண்களுக்குக் கிடைக்க வேண்டிய பாலியல் திருப்தி கிடைக்கப் பெறுவதாகவும் பெண்களது பாலியல் உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர். ஒருவர் குறிப்பிடுகையில் ‘கத்னா செய்யப்பட்ட பெண்கள் பாலியல் தொழிலில் ஈடுபடுவது குறைவு’ என்றார்.

இக்கட்டாயக் கடமையை நிறைவு செய்வதால் பெற்றோருக்குத் திருப்தி கிடைக்கின்றதாக குறிப்பிடும் பலர் பெண்ணின் பாலியல் உணர்ச்சி கட்டுப்படுவதாக வெளிப்படையாகவே குறிப்பிட்டனர். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தாது விட்டால் அது ஒரு அதிதீவிரப் பால்நிலைக் கோளாறாக (Hyper Sexual Disorders) அமையும் எனவும் கத்னா செய்வதனால் குறிப்பிட்ட உடல் உளப்பிரச்சினை (Body and Mental Disorder) ஏற்படாது இருக்கும் எனவும் நம்பப்படுகின்றது. இதனால் பாலியல் ரீதியாகப் பெண் பாதுகாப்பாக இருப்பாள் எனவும் அதாவது தன்னைத்தானே பெண் கட்டுப்படுத்திக் கொள்வாள் எனக் குறிப்பிடுகின்றனர். அவர்களது கருத்துப்படி கன்னித்தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலம் கணவனோடு திருப்தியான முறையில் வாழ்வதே நன்மை எனக் கொள்கின்றனர். அதுமட்டுமன்றிப் பெண்ணின் பிறப்புறுப்பில் அழுக்குகள் தங்காது, துப்பரவாக இருக்கும் என்பதோடு, தகாத தொடர்புகள் குறையும், நோய் (எய்ட்ஸ்) பரவுதல் குறைவடையும், அனாதைப் பிள்ளைகளின் பிறப்பு குறையும், பெண்கள் பாலியல் தொழிலாளிகளாக மாறும் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்க முடியும் என கருதுகின்றனர். மேலும் மன உளைச்சல் குறையும் மற்றும் ஒழுக்கமான ஓர் சமூகத்தைக் கட்டி எழுப்பலாம் என்பதோடு பெண்ணுக்குக் கீழ்ப்படிதல் மனப்பாங்கு உருவாகும் என்றவாறான அவர்கள் கருதுகின்ற நன்மைகள் தொடர்பாகக் குறிப்பிட்டனர்.

ஆய்வில் கலந்து கொண்டோரில் பெண் விருத்தசேதனம் செய்வதால் பெண்களுக்கு உண்டாகின்ற தீமைகள் தொடர்பாக வினவியபோது, அவ்வாறன தீமைகள் எதுவும் இல்லை என்ற பதிலே அதிகமாகக் கூறப்பட்டது. பெண் விருத்த சேதனம் செய்வதால் பெண்களுக்கோ அல்லது சிறுமிகளதோ உரிமை எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டதில்லை என்ற பதில்களே கத்னாவை ஆதரிப்போர் பக்கம் இருந்து கிடைக்கப்பெற்றன.

கண்டி மாவட்டத்தில் பெண் விருத்தசேதனம் செய்த பிரபல முஸ்லிம் பெண் மருத்துவர் ஒருவர் கூறும்போது “தற்கால நவீன பெண்கள் கத்னா செய்வதில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் இது ஆபிரிக்காவைப் போல பெண் பிறப்புறுப்புச் சிதைப்பு அல்ல. அதனால் நீங்கள் கவலைப்பட வேண்டாம்” என்றார். பெண் விருத்தசேதனம் செய்த மற்றொரு ஆயுர்வேத மருத்துவர் கருத்துக் கூறும்போது “இது ஆழமான வெட்டு அல்ல, எனவே நாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இங்கு ஆபிரிக்கச் சூழல் போல் இல்லை” எனக் குறிப்பிட்டார்.

எனினும், சிலர் இயற்கையாக உடல் ரீதியில் பெறப்படுகின்ற உணர்வுகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனக் குறிப்பிட்டனர். அதாவது கிளிடோரஸ் - பெண்குறி அதிக அளவில் வெட்டப்படுமானால் பாலியல் உறவில் சிக்கலைத் தோற்றுவிக்கலாம் எனவும் இதனால் திருமணத்தின் பின்னர் உள மற்றும் உடல் ரீதியான தாக்கத்திற்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகம் எனவும் குறிப்பிட்டனர். காலி மாவட்டத்தில் கத்னா செய்வதை எதிர்ப்போர் கத்னாவை மூடநம்பிக்கையோடு தொடர்புபட்டதொன்று எனக் கூறுகின்றனர். பெண்கள் சிலருக்கு தமது பெண் உறுப்பில் எப்பகுதியில் இச்செயற்பாடு செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்படுகின்றது என்ற விளக்கம் இதுவரையில் தெளிவாகத் தெரியாத தன்மையுடன் வாழ்கின்றனர்.

# பெண் விருத்த சேதனம் செய்வதால் பெண்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள்

ஆய்வில் கலந்துகொண்டோரில் கத்னாவை ஆதரிப்போர் பிரச்சினைகள் எதுவும் இல்லை எனவும் அல்லது தெரியாது எனவும் குறிப்பிட்டனர். மதக் கடமை என்பதோடு ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அது மதக் கடமைகளில் ஒன்றாகும் என சுட்டிக்காட்டப்பட்டதோடு தீமைக்கு வாய்ப்பில்லை எனவும் மொழியப்பட்டது.


எனினும் கத்னாவை மறுப்போர் கத்னாவுடன் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிடுகையில் இயற்கையாக உடல் ரீதியாகப் பெறப்படுகின்ற உணர்வுகளில் குறைபாடுகள் ஏற்படலாம். கிருமித் தொற்றுகளுக்கு ஆளாகலாம். பாலியல் உறவின் போதான உடல் உளரீதியான பிரச்சினைகள் ஏற்படலாம். பாலியல் உறவில் ஆர்வமின்மை மற்றும் திருப்தி இன்மை ஏற்படும் சாத்தியம் அதிகம் எனவும் கணவன், மனைவி உறவுக்குள் பாலியல் உறவின் அடிப்படையில் திருப்தியின்மை உண்டாகும் வேளையில் முரண்பாடுகள் தோன்ற வாய்ப்புள்ளது போன்றதான கருத்துகள் பெறப்பட்டன. புத்தளத்தில் கத்னா செய்யப்பட்ட குழந்தை ஒன்றிற்கு கிருமித் தொற்று ஏற்பட்டு சிறிது நாட்கள் உடல் சுகயீனமுற்றதாகப் பெண் ஒருவர் குறிப்பிட்டார்.

கத்னாவின் நடைமுறையானது பெண்களது பாலியல் உரிமையை மங்கச் செய்து பாலியல் உறவில் ஆண்கள் மட்டுமே இன்பத்தை அனுபவிக்கின்ற போக்கை உருவாக்குகின்றது. இதனால் பாலியல் உறவில் திருத்தியற்ற பெண்கள் உடலுறவை வெறுக்கின்றனர். கணவன் கட்டாயப்படுத்தும்போது அங்கு பெண்கள் விவாகரத்துப் பெறும் போக்கு அதிகரிக்கின்றது என்று கண்டியில் நேர்கண்ட பெண்ணொருவர் குறிப்பிட்டார்.

காலி மாவட்டத்தில் சிங்கள சமூகத்தை சேர்ந்த பெண்ணியல் நோய் மருத்துவர் ஒருவர் கத்னா தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் “இது பெண்களின் உணர்வோடு தொடர்பான விடயம், இது விளையாட்டான விடயம் அல்ல” எனக் குறிப்பிட்டார். மேலும், கத்னா செய்வதில் தனக்கு உடன்பாடு இல்லை எனவும் தன்னிடம் வருகின்ற முஸ்லிம் பெண் நோயாளர்களில் பலர் கத்னா செய்யப்பட்டவர்கள் எனவும் சிலர் அவ்வாறு செய்யாதவர்களாகவும் இருக்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார். குறிப்பிட்ட காலி மாவட்டத்தில் கடமை புரிகின்ற குடும்ப நல உத்தியோகத்தரிடம் கத்னா பற்றி வினவப்பட்டபோது, “எவ்வளவோ நல்ல விடயங்கள் பெண்கள் தொடர்பாக இருக்கும்போது ஏன் இவ்வாறு பெண்களுக்கு ஒன்றைச் செய்ய வேண்டும்” எனக் கேள்வி எழுப்பினார்.

- **“கத்னா செய்யப்பட்ட குழந்தை ஒன்றிற்கு பெண் உறுப்பு வழியாகக் கிருமித் தொற்று ஏற்பட்டபோது பெற்றோர் மாந்திரீக வழியில் தீர்வு காண முற்பட்டமை இடம்பெற்றுள்ளது. அதேமாவட்டத்தில் கத்னா செய்யப்பட்ட பிள்ளைக்கு கிருமித் தொற்று ஏற்பட்டபோது, முஸ்லிம் மருத்துவரை நாடித் தீர்வு பெற்றமையும் குறிப்பிடத்தக்கது” (காலி மாவட்டம்)**

# வருங்காலத்தில் மகளுக்கு விருத்த சேதனம் செய்யும் விருப்பம் உள்ளதா? இல்லையா?




படம் **1.4** எதிர்காலத்தில் விருத்தசேதனம் செய்வது தொடர்பான தனிநபர்களின் விருப்பங்கள்**.**

ஆய்வின்போது வருங்காலத்தில் மகளுக்கு விருத்தசேதனம் செய்யும் விருப்பம் தொடர்பாக வினவப்பட்டபோது பலதரப்பட்ட கருத்துகளைப் பெறமுடிந்தது. அவர்களில் 383 பேர் எதிர்காலத்தில் தாம் தமது மகளுக்கு கத்னா செய்யும் மனநிலையில் இருப்பதாக திடமாகக் குறிப்பிட்டனர். அவர்களில் 199 பேர் தாம் முடிவு செய்யவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டனர். 199 முடிவு செய்யாதோர், 49 நடுநிலையில் இருப்போர் மற்றும் 28 எதுவுமே குறிப்பிடாதவர்களாக உள்ளனர். 276 பேரினது சிந்தனையானது தர்க்கத்திற்கு உரியது. ஏனெனில் இவர்கள் ஏதோ ஒரு வகையில் கத்னாவின் பக்கம் ஈர்க்கப்படக் கூடியவர்கள் போல தோன்றுகின்றமையானது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆகவே இப்பரம்பலைச் சுகாதாரப் பிரச்சினைகள் சார்ந்தும் இஸ்லாமிய கோட்பாடுகள் சார்ந்தும் அறிவூட்டுவதன் மூலம் இவர்களை கத்னா செய்யும் வழக்கத்தில் இருந்து விலக்கலாம்.

- **“கத்னா செய்வது மோசமானது என்று நான் கேள்விப்பட்டேன். ஆனால் எனது பேரக் குழந்தைக்காக நான் அதனைச் செய்தேன். கத்னா செய்ய வேண்டும் என்று நமது இஸ்லாத்தில் எந்தச் சட்டமும் இல்லை.” (கண்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயார்)**


சிலர் தமக்குக் கத்னா செய்யப்பட்டதை பற்றி பிற்காலத்தில் கண்டறிந்ததைப் பற்றிப் பேசினர்.

- **“இங்கு இது மிகவும் பொதுவானது மற்றும் மிகவும் சாதாரணமானது. இரகசியமாகவும் செய்யப்படுகிறது. பெரும்பாலான பெண்களுக்குக் கத்னாவைச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அதனை அறியாமலும் போகலாம். எனக்கு விருத்தசேதனம் செய்யப்பட்டது என்பதை சமீபத்திலேயே கண்டுபிடித்தேன். எனக்குள் ஒரு உணர்வு இருந்துள்ளது. ஆனால் தற்போது அந்த உணர்வு தடை செய்யப்பட்டதாக இருப்பதால் அதனை என்னால் திரும்பப் பெறவும் முடியாது. அத்துடன் அதனை யாரிடமும் கேட்டுப் பெறவும் முடியாது.” (அக்குறணையைச் சேர்ந்த கத்னா செய்யப்பட்ட பெண்)**

- “**நான் இஸ்லாமிய மதத்தைத் தழுவியபோது கத்னா பற்றிக் கேள்விப்பட்டேன். பள்ளிவாசலில் இருந்தவர்கள் என்னை அணுகி, ‘இஸ்லாத்திற்கு மாற விரும்புகிறீர்களா?’ என்று கேட்டார்கள். நான் முஸ்லிமாக மாற அதைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்” (இஸ்லாத்தைத் தழுவிய புத்தளத்தைச் சேர்ந்த ஓர் பெண்)**

# பெண் விருத்தசேதனம் என்பது கட்டாயமான இஸ்லாமிய மத நடைமுறை என நீங்கள் எண்ணுகிறீர்களா?

படம் **1.5:** நேர்காணல் செய்யப்பட்ட நபர்கள் இறையியல் பார்வை மூலம் **FGMC** பற்றி தமது கருத்துகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள்




ஆய்வின்போது கலந்து கொண்டோரில் *398* பேர் பெண் விருத்த சேதனம் என்பது கட்டாய இஸ்லாமிய நடைமுறை என்று தெரிவித்தார்கள். அவர்களில் *269* பேர் தமக்கு பெண் விருத்த சேதனம் என்பது கட்டாயமான இஸ்லாமிய மத நடைமுறையா எனத் தெரியாது எனக் குறிப்பிட்டனர். *331* பேர் உறுதியாக அல்குர் ஆனில் கத்னா செய்வது குறிப்பிடப்படவில்லை என அறிந்திருந்தனர்.

- **"உண்மையில் முஸ்லிமாக மாறுவதற்கு நாம் கத்னா செய்ய வேண்டும். இல்லையெனில் நாம் சொர்க்கத்திற்குச் செல்ல முடியாது என்று எனக்குத் தெரியும்." *(கத்னா செய்யப்பட்ட புத்தளத்தைச் சேர்ந்த ஓர் பெண்)***

- **"கத்னாவைக் கட்டாயமாக செய்ய வேண்டிய ஒரு மத நடைமுறை என்றவாறு ஊக்குவிக்கும் சில நம்பிக்கைகள் பள்ளிகளில் உள்ளன. அத்தோடு அது பர்ளு கட்டாயம் என்று கூறுகின்றன." *(சமூகத்தில் வேலை செய்யும் தாயொருவர்).* அகில இலங்கை ஜாமியத்துல் உலமாவினால் *(ACJU)* கத்னா சம்பந்தமாகக் கொடுக்கப்பட்ட தீர்ப்பு இதில் இணைக்கப்பட்டுள்ளது.**

- **"சில மார்க்கத் தலைவர்கள் அதை நாம் செய்யக்கூடாது என்று கூறியுள்ளனர். செய்வதால் பாவம் இல்லை. ஆனால் கத்னா செய்ய வேண்டும் என்று அல் குர்ஆன், ஹதீஸ்கள் கூறவில்லை. கத்னா செய்ய வேண்டும் என்று சொல்கின்ற எவ்வித ஆதாரமும் இல்லை. ஸஹாபாக்கள் காலத்தில் கத்னா செய்யப்பட்டதா என்பது கூட நமக்குத் தெரியாது." *(வாழைச்சேனையில் இருந்து ஆய்விற்கு உதவியவர்)***

மட்டக்களப்பு மாவடிச்சேனை தவ்ஹீத் ஜமாத்தினால் இறந்த உடலைக் குளிப்பாட்டுவது தொடர்பான பயிற்சியை இந்தியாவில் இருந்து வந்த இஸ்லாமிய வளவாளர் ஒருவர் ஊடாக நடாத்தியிருந்தனர். அங்கு வந்த வளவாளர் பெண்களுக்குக் கத்னா செய்யத் தேவையில்லை எனக் குறிப்பிட்டார். இதன் பின்னர் குறிப்பிட்ட பயிற்சியில் பங்குகொண்ட அப்பகுதியின் சாதாரண பெண் ஒருவர் தமது குடும்பத்தில் உள்ளவர்களுக்குக் கத்னா செய்வதற்கு அனுமதியளிக்கவில்லை. இவரால் அப்பகுதியில் உள்ள பல பெண் குழந்தைகள் கத்னா செய்யாது காப்பாற்றப்பட்டார்கள்.

"அல்குர் ஆனில் காலை எழுந்தது முதல் இரவு தூங்கச் செல்லும் வரைக்கும்; இஸ்லாத்தில் உள்ளவர்களின் கடமைகள் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கூறப்பட்டுள்ள அனைத்திலும் நன்மைகள் உள்ளன. அதுபோலவே பெண்களுக்கு கத்னா செய்வது தொடர்பாக ஏதாவது நன்மை இருந்திருப்பின் அதுவும் கூறப்பட்டிருக்கும். ஆனால், பெண் கத்னா தொடர்பாக எதுவும் அல்குர் ஆனில் கூறப்படவில்லை" என சம்மாந்துறையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஒருவர் கூறினார்.

இன்னொருவர் "கத்னா செய்ய வேண்டும் என்று அல் குர்ஆனில் ஒரு வசனமும் இடம்பெறவில்லை இல்லை. அல்லது நாம் கட்டாயம் செய்ய வேண்டும் என்றவாறு வலுவாக ஹதீஸிலோ அல்லது வேறு எங்கும் எந்த ஆதாரமும் இல்லை. மக்கள் எல்லாவற்றையும் தமது சூழலுக்கு ஏற்ப செய்கின்றனர்". (மட்டக்களப்பில் உள்ள இஸ்லாமிய மத அறிஞர்)


"திஹாரியாவைச் சேர்ந்த தவ்ஹீத் பிரிவின் இஸ்லாமிய அறிஞர் கத்னா செய்வது முக்கியமானது எனக் கூறியுள்ளார்" "என் சகோதரர் ஒரு மௌலவி, அவரும் கத்னா செய்ய வேண்டும் என்று கூறினார்."

"எங்கள் சமூகத்தில், குறிப்பிட்ட நடைமுறை உள்ளது. அதை நாங்கள் மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. கத்னா பற்றி ஏனையவரிடம் எந்த விளக்கமும் கேட்க வேண்டியதில்லை. நாம் கத்னாவைச் செய்ய வேண்டும் என்று யாரும் சொல்லவும் இல்லை. எனினும், நாம் கத்னாவைச் செய்கிறோம். கத்னா பற்றி நான் ஒரு பொது மார்க்கப் பிரசங்கத்தில் (பயானில்) கேள்விப்பட்டேன். பிரசங்கம் செய்தவர் மிகவும் படித்தவர். நீங்கள் கத்னா செய்தாலும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை என்றார். ஒரே ஒரு ஹதீஸில் உள்ளது. அதைச் செய்ய வேண்டும் என்று நமது இஸ்லாத்தில் எந்தச் சட்டமும் இல்லை". (பொலன்னறுவையில் இருந்து ஆய்வு செய்யப்பட்டவர்)

"எங்கள் சமூகத்தில் இஸ்லாமிய அறிஞர்கள் இருக்கிறார்கள். எமக்கு உதவி தேவைப்படும்போது நாங்கள் அவர்களை அணுகுகிறோம். ஆனால் கத்னாவை ஊக்குவிக்கும் குறிப்பிட்ட எக்குழுவும் இல்லை." (அம்பாறையில் இருந்து நேர்காணல் செய்யப்பட்டவர்)

முஸ்லிம் பெண்களுடன் பணியாற்றிய கண்டியைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் ஒருவர் கத்னா தொடர்பாக தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்: "கணவன்மார்கள் தங்கள் மனைவிமாரை கத்னா செய்யவில்லை என்ற காரணத்தால் வெளியேற்றிய சந்தர்ப்பங்களைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்."


# பெண் விருத்த சேதனம் சட்டத்தால் அனுமதிக்கப்படுகிறதா?




படம் **1.6:** இலங்கை சட்டத்தின்படி, **FGMC** பற்றிய தனிநபர்களும் அவர்களின் புரிதலும்

ஆய்வின்போது பெண் விருத்தசேதனம் சட்டத்தால் அனுமதிக்கப்படுகிறதா என வினவப்பட்டபோது அவர்களில் 328 பேர் ஆம் எனவும், 271 பேர் இல்லை எனவும், 399 பேர் தெரியாது எனவும் குறிப்பிட்டனர். அரசினால் விருத்தசேதனத்தை அரச வைத்தியசாலைகளில் தடைசெய்து அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றறிக்கை பற்றி எவரும் தெரிந்து இருக்கவில்லை. (சுற்றறிக்கையானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது- 2018)

# கத்னா தொடர்பான பயிற்சி அதாவது கத்னா தொடர்பான நடைமுறை தொடர்தல் வேண்டுமா?




படம் **1.7 FGMC** ஒரு நடைமுறையாகத் தொடர்வதில் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தும் நபர்கள்**.**

ஆய்வில் கத்னா தொடர்பான பயிற்சி அதாவது கத்னா தொடர்பான நடைமுறை தொடர்தல் வேண்டுமா? என வினவப்பட்டபோது 372 பேர் ஆம் எனவும், 296 பேர் இல்லை எனவும், 140 பேர் முடிவெடுக்கவில்லை என்பதோடு, 190 பேர் பதில் எதுவும் சொல்லவில்லை.

# விருத்தசேதனம் செய்யாத பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்


கத்னா செய்யாத பெண்கள் சமூகத்தில் உள்ளவர்களால் இழிவாக நடத்தப்படுவதாகவும் தமது மதக் கடமையில் இருந்து தவறியவர்களாகவும் வயோதிபப் பெண்களால் கடுமையான மன அழுத்தத்திற்கு உட்படுவோராகவும் இருக்கின்றனர். இவ்வாறான காரணங்களால் தாயொருவர் தனது மூத்த மகளுக்கு கத்னா செய்ததாக குறிப்பிட்டார். மதத் தலைவர்களுடன் முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பங்கள் உள்ளதாகவும் ஒரு சிலர் குறிப்பிட்டனர்.

வேறொருவர் குறிப்பிடுகையில் வீட்டில் உள்ள மூத்தவர்களுடன் முரண்பாடுகள் ஏற்படும். இதனை ஆதரிக்கும் சமூகக் குழுக்களிடமிருந்து எதிர்ப்புகள் உருவாகும். சில படித்தவர்கள் பெண் சுன்னத்தை ஆதரிக்கிறார்கள். அவர்களோடு முரண்பாடுகள் ஏற்படும். ஒரு சில மௌலவிமார்களுடன் பகைமை உருவாகும் எனக் கூறினார்.

புத்தளம் மாவட்டத்தில் தாயொருவர் தனது பிள்ளைக்கு கத்னா செய்யவில்லை எனவும், நிமோனியாக் காய்ச்சல் வந்து பிற்காலத்தில் குழந்தை இறந்ததாகவும் அதற்குக் காரணம் கத்னா செய்யாமை என அவரது தாய் எப்போதும் சுட்டிக்காட்டுவதால் தனக்கு மன உளைச்சல் ஏற்படுவதாக ஓர் பெண் குறிப்பிட்டார்.

# பெண் விருத்த சேதனத்தை ஒழிக்க முடியுமா?

படம் **1.8 FGMC** ஐ ஒழிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த தனிநபர்களின் பார்வைகள்**.**




ஆய்வில் கருத்துப் பரிமாறியவர்களில் 289 பேர் பெண் விருத்த சேதனத்தை ஒழிப்பதற்கான அல்லது நடைமுறையைத் தடை செய்வதன் மூலம் இதைத் தொடர்வதை நாம் தடுக்க வேண்டும் எனக் கூறினர். குறைந்த பட்சம் நம்மைச் சுற்றியுள்ள மக்களிடமாவது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நாம் பணியாற்ற வேண்டும் என்றும் அதனால் எம்மைச் சுற்றி ஒரு மாற்றத்தை உருவாக்குவது முக்கியம் என்பதும் அவர்களது கருத்தாகக் காணப்பட்டது.


- இந்தப் பழக்கம் எங்கிருந்து வந்தது என்பதைப் பற்றிப் பேசி விழிப்புணர்வை ஏற்படுத்துவது நமக்கு முக்கியம் என்று நினைக்கிறேன். கத்னா பற்றி நாம் உணர்வுபூர்வமாக இருக்க வேண்டும். ஆனால் பெண்களின் பாதுகாப்பை நாம் வலியுறுத்த வேண்டும், அப்போது இந்த நடைமுறை நிறுத்தப்படும். எதையும் இஸ்லாமிய மதத்தினுடைய அல் குர்ஆன், ஹதீஸ் ஆதாரத்துடன் பேச வேண்டும்" (மன்னாரில் இருந்து நேர்காணல் செய்யப்பட்டவர்).

- "புதிய தலைமுறையினருடன், குறிப்பாக குழந்தைகளுடன் பேசுவது முக்கியம். கத்னா பற்றி என் பாட்டியிடம் பேச முடியவில்லை. ஆனால் நான் என் குழந்தைகளுடன் கத்னா பற்றிப் பேசினேன். என் மகள்கள் என்னுடன் அமர்ந்து, கத்னா ஏன் செய்யக் கூடாது என்றும், நாங்கள் தொடர்ந்து கத்னாவை ஏன் செய்யக் கூடாது என்றும் எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இது மிகவும் முக்கியமானது என்று நான் நினைக்கின்றேன். (பேராதனையில் இருந்து நேர்காணல் செய்யப்பட்டவர்)

- "பெண் ஒருவர் கர்ப்ப முற்ற பின்னர் ஸ்கான் செய்து பார்க்கும் போது குறிப்பிட்ட குழந்தை பெண் குழந்தை எனத் தெரிய வரும் வேளையில் இருந்தே கத்னா தொடர்பான பாதகமான விளக்கத்தை பெண்களுக்கு வழங்குதல் அவசியம்" (இல்லத்தரசிஇ ஒலிவில்)

- "விழிப்புணர்வு உண்மையில் சமூகத்திலிருந்தே தொடங்க வேண்டும். உடல் சுயாட்சி போன்ற விடயங்களைச் சொன்னால், அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். இதுஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறையாக இல்லை என்பதை அவர்களுக்கு காட்ட வேண்டும்". (கொழும்பில் மருத்துவத் துறைசார் நிபுணருடனான கலந்துரையாடல்)

# பெண் விருத்தசேதனம் பற்றிய கண்ணோட்டம்





படம் **1.9 FGMC** இன் சாத்தியமான தீங்கு குறித்து தனிநபர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்கள்**.**

பெண் விருத்தசேதனம் பற்றிய கண்ணோட்டம் தொடர்பாக வினவப்பட்டபோது தீங்கு விளைவிக்கும் என 286 பேரும் நன்மை பயக்கும் என 278 பேரும், இவர்களில் நடுநிலை மற்றும் நிச்சயமற்றது என்பவற்றைத் தெரிவு செய்த 434 பேர் கத்னாவை நிறுத்த வேண்டும் என்ற எவ்வித அக்கறையோ அல்லது கரிசனையோ இன்றிக் காணப்படுகின்றமை தெளிவாகின்றது. இவர்களது விருப்பத் தெரிவும் கத்னாவை மறைமுகமாக ஆதரிப்பதாகவே அமைகின்றது.

"ஆண்களுக்கான சுன்னத் விஞ்ஞான ரீதியில் உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெண் கத்னா தொடர்பாக மருத்துவ ரீதியில் அனுகூலமாக எதுவும் சொல்லப்படவில்லை. அதேபோல ஆண் சுன்னத் செய்பவர்கள் பயிற்றுவிக்கப்பட்டோர்களாக இருக்கிறார்கள். ஆனால் பெண் கத்னா செய்பவர்கள் அவ்வாறு பயிற்றுவிக்கப்படுவதில்லை" எனவும் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணொருவர் குறிப்பிட்டார்.

# பெண் விருத்த சேதனம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் நடைமுறை தொடர்பாக அறிந்தோர்





படம் **2.0 FGMC** பற்றிய விழிப்புணர்வு மற்றும் நடைமுறை இரண்டையும் நேர்காணல் செய்பவர்களின் பார்வையை விளக்குகிறது

பெண் விருத்த சேதனம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் நடைமுறை தொடர்பாக அறிந்தோராக 468 பேர் காணப்பட்டாலும் கத்னா தொடர்பாக விழிப்புணர்வு அற்றவர் மற்றும் தெரியாதோர் எண்ணிக்கை 220 ஆகக் காணப்படுகின்றது. இவர்களில் எவ்வித பதிலும் சொல்லாத 310 பேர்களது சிந்தனை என்பது மிகவும் பிற்போக்குத்தனமானது எனலாம். இவர்களும் இதனை ஆதரிப்போராகவே இருக்கக் கூடியவர்கள் எனலாம்.

- **“அல் குர் - ஆனில் ஆடு, மாடு, கோழி போன்ற மிருகங்களை வெட்டும் போது எவ்வாறு வெட்டுதல் வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் கத்னா எவ்வாறு செய்தல் வேண்டும் என்பது தொடர்பாக அல் குர்-ஆனில் எந்த விளக்கமும் கூறப்படவில்லை” என பிறைத்துறைச் சேனையைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஒருவர் குறிப்பிட்டார்.**

- **“அடிப்படைப் பாலியல் கல்வி மற்றும் குழந்தைகளுக்கு அவர்களின் உடல்கள் மற்றும் அவர்களின் பாலுணர்வு பற்றிக் கற்பிக்க வேண்டும். இக்கல்வி இல்லாதபோதே இதுபோன்ற பிரச்சினைகள் வரும்.” (சமூக செயற்பாட்டாளர் காலி மாவட்டத்தில் இருந்து)**

# பெண் விருத்த சேதனம் தொடர்பான தனிப்பட்ட அனுபவங்கள் மற்றும் தாக்கம் உள்ளதா?




படம் **2.1: FGMC** தொடர்பான தங்கள் கவலைகள் அல்லது அனுபவங்களை பகிர்ந்து கொண்ட நபர்கள்

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த மகப்பேற்று வைத்தியர் 'அ' தன்னிடம் தேவை நாடிச் சென்ற ஒருவரிடம் "நாம் கத்னாவைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் எந்தப் பிரச்சினையும் இல்லை" என்றார். "நன்மைகள் உள்ளதா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது. என் பேரக்குழந்தைகள் கத்னா தொடர்பில் ஆர்வம் செலுத்தவில்லை. அதனால் இந்த வழக்கம் இடையே நின்று போகிறது. கத்னாவைச் செய்வது அவரவர் விருப்பம். அமெரிக்காவில் கத்னா செய்யப்பட்டுள்ளதா இல்லையா என ஆராய்வதால் என் பேத்திகள் கத்னா செய்தபோது சிறிது காலம் அமெரிக்கா திரும்பிச் செல்லவில்லை."

தற்போது 80 வயதுள்ள கண்டியைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாம் மதத்திற்கு மாறிய தனது முன்னைய கதையைப் பகிர்ந்துள்ளார்:

- "எனக்கும் என் மகளுக்கும் ஒஸ்தா மாமி கத்னா செய்தார். என் கணவர் இறந்தபோது, பள்ளிவாசலில் இருந்தவர்கள் என்னை அணுகினார்கள். எனது வாழ்க்கை பெருளாதார ரீதியாக நெருக்கடியில் இருப்பதாகவும் எனக்கு ஆதரவு இருந்தால் நன்றாக இருக்கும் என்றும் அவர்கள் சொன்னார்கள். என்னை இஸ்லாத்திற்கு மாற விரும்புகிறீர்களா என்று கேட்டார்கள். நான் முஸ்லிமாக மாற கத்னாவைச் செய்ய வேண்டும் என்றார்கள். அவர்கள் ஒஸ்தா மாமியை அழைத்து வந்து, எனக்கு வசதியாக எல்லாவற்றையும் செய்து தருவதாகவும் சொன்னார்கள். அதனால் நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன். எனக்கு அப்போது சுமார் 40 வயது இருக்கும். நான்கு குழந்தைகள் இருந்தனர். நான் என் குழந்தைகளுக்காகக் கத்னா செய்தேன். என் மகள்களுக்கு அப்போது 10 மற்றும் 5 வயதாக இருந்தது. ஒஸ்தா மாமி எங்கள் தோலின் மிகச் சிறிய பகுதியை வெட்டினார். எனக்கு அந்த வலி நினைவிருக்கிறது. ஆனால் நான் வேறு என்ன

செய்ய முடியும்? கொஞ்சம் வலித்தது. எனக்கு அந்த வலி நினைவிருக்கிறது. ஆனால் நான் வேறு என்ன செய்ய முடியும்? கொஞ்சம் வலித்தது. ஆனால் அவ்வளவுதான். நான் என் மகள்களுக்கும் கத்னாவைச் செய்தேன், அப்போதுதானே அவர்கள் இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்,"

மற்றொருவர் தனது மூத்த சகோதரிக்கு விருத்தசேதனம் செய்தபோதும் தனது தாயார் அதனை தனக்குப் பின்பற்றவில்லை என்று பகிர்ந்து கொண்டார்.

- "என் உம்மா கத்னாவைப் பற்றிக் கதைத்தபோது அதை என் சகோதரிக்குச் செய்ததாகச் சொன்னது நினைவிருக்கிறது. ஆனால் அவரால் அதை எனக்குச் செய்ய முடியவில்லை, ஏனென்றால் அவர் கத்னா செய்யும் ஒரு மருத்துவிச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, குறிப்பிட்ட மருத்துவிச்சி ஒரு பெண்ணுக்குக் கத்னா செய்து அதனால் ஏற்பட்ட கிருமித்தொற்றுக் காரணமாக கத்னா செய்யப்பட்ட பெண் இறந்த காரணத்தால் கைது செய்யப்பட்டிருந்தார். அதனால் என் உம்மா பயந்து, எனக்குக் கத்னா செய்யவில்லை. "

- "எகிப்திய நாட்டில் சர்ச்சை ஏற்பட்டபோது, கத்னா செய்யக் கூடாது எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. அதுமட்டுமன்றி கத்னா செய்வதால் பல்வேறுபட்ட சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் உயிரிழப்பு ஏற்படும்" என மாவடிச்சேனையைச் சேர்ந்த மார்க்க அறிஞர் ஒருவர் கூறினார். இவர் தனது 28 வயதுடைய மகள் மற்றும் 2 வயதுடைய பேத்திக்கும் கத்னா செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது."

- "எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். என் மகளுக்கு கத்னா செய்தபோது தான் கத்னா பற்றி முதலில் கேள்விப்பட்டேன். நான் கத்னா செய்ய விரும்பவில்லை என்று என் உம்மாவிடம் சொன்னேன். ஆனால் அவர் எனது மகளுக்குக் கத்னா செய்ய வைத்தார். ஒஸ்த மாமி என் வீட்டுக்கு வந்தாள். குங்குமப்பூத் தண்ணீர் கேட்டுக் கத்தியைக் கையில் எடுத்தாள். நான் கவலைப்பட்டேன். பார்க்கக் கூட முடியவில்லை."

- மற்றொரு நபர் குறிப்பிடுகையில் தனது மகள்களுக்கு விருத்தசேதனம் செய்வதை அவரது தந்தை எப்படித் தடுக்க முயன்றார் என்பதைப் பகிர்ந்து கொண்டார்: "ஆம், எனக்கு மூன்று மகள்கள் உள்ளனர். எனது முதல் மற்றும் இரண்டாவது மகள்களுக்கு நான் கத்னா செய்யவில்லை. பொலன்னறுவையில் வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் அக்குறணையில் கத்னா செய்ய நேர்ந்ததால் எனது மூன்றாவது மகளுக்குக் கத்னா செய்யக் காத்திருக்க வேண்டியிருந்தது. முதலில் கத்னா செய்வது அவசியம் என்று கூட நான் நினைக்கவில்லை. ஆனால் சிலர் கத்னா செய்யச் சொன்னார்கள். என் வாப்பா கத்னாவை செய்ய வேண்டாம் என்று சொன்னார். எனது முதல் இரண்டு மகள்களும் வலியைப் புரிந்துகொள்ளும் வயதுடையவர்களாக இருந்ததால் அவர்களுக்கு நான் கத்னாவை செய்யவில்லை. மாத்தளையில் ஒரு பெண்மணி வந்து கத்னா செய்து கொண்டிருந்தாள். எனது கடைசி மகளுக்கு கத்னா செய்ய என்னுடன் துணைக்கு ஒரு பெண் வந்திருந்தார். ஏனென்றால் எனது மகளுக்கு கத்னா செய்வதைப் பார்க்க என்னால் சகிக்க முடியவில்லை.

சிலர் தங்கள் குழந்தைகளுக்கு விருத்த சேதனம் செய்தபோது ஏற்பட்ட அவர்களின் பயம் அல்லது வெறுப்பை விவரிக்கும் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்:

- “எங்களிடம் அந்தப் பெண்கள் வந்தபோது நாங்கள் அவர்களை ஒஸ்தா மாமி என்று அழைத்தோம். எப்போதும் வெற்றிலை சாப்பிட்டுக் கொண்டே இருப்பார். விருத்த சேதனத்திற்குச் சான்றாக இரத்தத்தைக் காட்ட அவர்கள் சாப்பிட்ட வெற்றிலைச் சாற்றைப் பஞ்சுடன் தோய்த்த கதைகளை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சுமார் 3000 ரூபாய் எடுத்துக் கொள்வார்கள். அவர்கள் பணம் சம்பாதிப்பதற்கான விரைவான வழியாக இது இருந்தது. அவர்களை இப்போது எங்கும் காண முடியாது. இப்போது அதைச் செய்யும் மருத்துவர்கள் எங்களிடம் உள்ளனர். ” (கண்டி மாவட்டத்தில் இருந்து)

- “ஒஸ்தா மாமி என் வீட்டுக்கு வந்தாள். எங்கள் வீட்டில் ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று பெண் குழந்தைகளுக்குக் கத்னா செய்தோம். ஒஸ்தா மாமிகள் சுத்தமாக இல்லை.” (மத்திய மாகாணத்தை சேர்ந்தவர்)

- “நான் முதலில் என் குழந்தையைப் பெற்றெடுத்தபோது, வீட்டில் வாடகைக்கு இருந்த பெண், எங்கள் கிராமத்தில் ஒஸ்தா மாமி இருந்ததையும் ஆண்கள் அவளை விரட்டியடித்ததையும் ஒரு கதையாகச் சொன்னாள். எங்கள் மதத்தில் கத்னா செய்வதில்லை என்றும் அந்தப் பெண்ணை நம்ப முடியாது என்றும் சொன்னார்கள். எனக்கு ஞாபகம் உள்ளது. கத்னா செய்யும் பெண்கள் வந்தபோது கத்னா செய்ய வேண்டித் தங்கள் குழந்தைகளை அவர்களிடம் ஒப்படைப்பார்கள். இது 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது." (பேராதனையில் இருந்து நேர்காணல் செய்யப்பட்டவர்)

- “என் மகள் பிறந்தபோதுதான் கத்னாவைப் பற்றிக் கேள்விப்பட்டேன். நாங்கள் அதை விருப்பத்துடன் செய்தோம்.” (திருகோணமலை கந்தளாய்)

- “கத்னா செய்ய வேண்டும். நான் ஒரு வைத்தியராக இருந்தாலும் மதம் என்று வரும்போது, அதற்குதான் நான் முன்னுரிமைப்படுத்துவேன்”. (பொலன்னறுவை - சுங்காவில்)

- வைத்தியர் “ஆ”விடம் நாங்கள் எமது பேத்திக்கு விருத்த சேதனம் செய்ய விரும்புகிறோம் ஆனால் எனது மகள் அது தொடர்பான தெளிவில்லாமல் இருக்கிறார் எனக் குறிப்பிட்டபோது 'நவீன பெண்கள் எப்படி நடைமுறையில் வேறுபடுகிறார்கள் என்றும் இணையத்தில் பெண்களின் விருத்த சேதனத்தின் நன்மைகளை ஆராயும்படியும் கூறினார். ஆனால் இது ஒரு சிறிய வெட்டு என்றும் இதனால் கவலைப்பட வேண்டிய விடயம் எதுவும் இல்லை என்றும் அவர் பேசினார். (கடுகஸ்தோட்டையில் இருந்து)

- வைத்தியர் “ஆ” விருத்தசேதனம் செய்வதற்கு 3000 ரூபா மற்றும் காது குத்துதல் நடைமுறைக்கு 2000 ரூபா வாங்குகிறார். (பேராதனையில் இருந்து தாயொருவர் கூறியது)

மடவளை ஆயுர்வேத வைத்தியர் 30 வருடங்கள் வைத்தியத் துறையில் பணியாற்றியவர். அவர் விருத்தசேதனம் செய்வதாக ஒப்புக்கொண்டார். மௌலவிகள் பெண்களையும் குழந்தைகளையும் தன்னிடம் அழைத்து வருவதால் அவர்களை திருப்பி அனுப்ப முடியவில்லை எனக் குறிப்பிட்டார். இது இஸ்லாத்திற்கு எதிரானது என்று ஒப்புக்கொண்டார். ஆனால் இது மிகைப் பாலியல் மற்றும் விரிவாக்கப்பட்ட பிறப்புறுப்பு போன்ற கவலைகிடமான விடயங்களை கட்டுப்படுத்துவதற்கு உதவியதோடு வெளிநாட்டில் வளர்ந்த பெரிய பெண் குழந்தைகளிற்கும் அவர் கத்னாவைச் செய்கிறார்.


நேர்காணல் கண்ட ஒரு நபர் குறிப்பிடுகையில் பிரபல வைத்தியர் ஒருவரது மனைவியும் பெண் விருத்த சேதனம் செய்தார் என்று குறிப்பிட்டார். இப்பெண் வைத்தியர் “அ” ஒரு சிறுநீரக மருத்துவர். ஆண் மருத்துவர்களின் மனைவிகளான பல பெண் மருத்துவர்கள் தனியார் மருத்துவமனைகளில் பெண் விருத்த சேதனம் செய்வதாக அதேநபர் கூறினார். வைத்தியர் “ஆ” வினது கணவரும் கண்டியில் பிரபலமான மருத்துவர் ஆவார். முதலில் குறிப்பிட்ட பெண் ஆயுர்வேத வைத்தியரும் ஒரு வைத்தியரையே மணந்துள்ளார்.

காலி மாவட்டத்தில் நேர்காணல் செய்யப்பட்ட மருத்துவிச்சி பெரும்பாலும் முஸ்லிம் பெண்களுடன் பணிபுரிந்திருந்தார். இந்த நடைமுறையை அவர் அறிந்திருந்தும், தகவலை வழங்குவதில் மிக எச்சரிக்கையாக இருந்தார். இது முஸ்லிம் சமூகத்தில் நடந்த ஒன்று என்று மட்டுமே கூறினார். முஸ்லிம் அல்லாத மற்றும் முஸ்லிம் தாய்மார்களுக்கு இடையே எந்த வித்தியாசத்தையும் தன்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் அவர்கள் கர்ப்பம் மற்றும் பிரசவம் போன்ற விடயங்களில் எல்லாப் பெண்களையும் போலவே அதே வலியை அனுபவித்ததாகவும் அவர் கூறினார்.

பொலன்னறுவையில் பல்கலைக்கழக மாணவிகள், பாடசாலை மாணவிகள் மற்றும் இளம் மௌலவியாக்களிடம் கத்னா பற்றிய கேள்விகளை கேட்கும்போது அவர்கள் அதிர்ச்சியடைந்து அப்படி ஒன்று உள்ளதா? எனவும் இதுவரை அவ்வாறு கேள்விப்படவில்லை எனவும் குறிப்பிட்டனர். அதற்குக் காரணம் இவ்விடயம் சாதாரண ஒரு விடயமாகவே கருதப்படுகிறது. யாரும் யாரிடமும் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பகிர்ந்து கொள்வதில்லை. தொடக்கு நீக்குகின்ற சம்பவத்துடன் இணைந்து கத்னா இடம்பெறுகின்றமையால் எவரும் வெளிப்படையாக சொல்லிக் கொள்வதில்லை.

திருகோணமலை கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண் ஒருவர் குறிப்பிடுகையில் “நபிகள் நாயகம் அவர்களது காலத்தில் அவரது மனைவிக்கோ அல்லது மகளுக்கோ கத்னா செய்யப்பட்டதாக அறியப்படவில்லை. அவ்வாறு சொல்லப்படாத ஒரு விடயத்தை எதற்குப் பின்பற்ற வேண்டும் எனக் கேள்வி எழுப்பினார். அத்தோடு சுகாதார ரீதியாகவும் கத்னா தொடர்பாக நன்மைகள் எதுவும் இல்லாதபோது எதற்காக அதனைப் பின்பற்ற வேண்டும்” என்பது அவரது வினாவாக அமைந்தது.

# பெண் விருத்த சேதனத்தை எதிர்ப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளீர்களா?




படம் **2.2: FGMC** நடைமுறைக்கு எதிராக வாதிடும் நபர்கள்

குறிப்பிட்ட ஆய்வில் பெண் விருத்தசேதனத்தை எதிர்ப்போர் மற்றும் நிறுத்துவதற்காக வாதிடுவோராக 274 பேர் அடையாளம் காணப்பட்டனர். பெண் விருத்தசேதனத்தைத் தடை செய்யக்கூடாது என 298 பேர் குறிப்பிட்டனர். பெரும்பாலானவர்கள் எதற்கும் விடையளிக்கவில்லை.

- "நடைமுறையை நாம் தடை செய்ய வேண்டும். நாம் அதைப் பற்றி அதிகம் பேச வேண்டும். இது இஸ்லாத்தில் கூறப்பட்ட ஒன்றல்ல என்பதற்கான ஆதாரத்தை நாம் வெளிக்கொண்டுவர வேண்டும். இந்த உரையாடலை நாம் சமூக ஊடகங்கள் அல்லது தொலைக்காட்சிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பதில்லை. ஆனால் குறிப்பிட்ட விடயத்தை உணர்வு பூர்வமாகக் கையாள வேண்டும் என எண்ணுகின்றனர். (கலந்துரையாடல் அம்பாறை)

- "நாம் கத்னாவைக் குற்றமாக்கும் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். ஆனால் அது போதாது, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பணியாற்ற வேண்டும். ACJU செய்த பத்வாவை இரத்து செய்ய வேண்டும். அவர்கள் தங்கள் சொந்த நலனுக்காக ஆய்வு செய்யாமல் பத்வா கொடுக்க முடியாது. முஸ்லிம் பெண்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோருடன் பேசி இதை மனித உரிமைப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு கத்னாவைக் குற்றமாக வலியுறுத்த வேண்டும்". (கலந்துரையாடல் புத்தளம்)

- "நாம் குறிப்பிட்ட விடயம் பற்றிப் பேச வேண்டும். மருத்துவர்கள் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தி, இளம் பெண்களுக்கு கத்னா செய்ய வேண்டியதில்லை என்று சொல்ல வேண்டும்".

- "நாம் அதை நிறுத்த வேண்டும். நாம் இளம் தாய்மார்கள் மீது கவனம் செலுத்த வேண்டும்."


- “நாம் மக்களுக்கு சரியான விதத்தில் புரிய வைக்க வேண்டும். ஆனால் குழந்தைகள் இப்போது தைரியமாக இருக்கிறார்கள். அவர்கள் கத்னா தொடர்பான விடயங்களைத் தேடுகிறார்கள். அவர்களாகவே கற்றுக்கொள்கிறார்கள். என் மகளும் தன் மகளைப் பெற்றெடுத்தபோது கத்னா தொடர்பாக ஆராய்ந்தே அதைச் செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தார்.”

- “மக்கள் என்ன செய்கிறார்கள் என்று கேள்வி கேட்க வேண்டும். சமூக ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் மற்றும் கத்னா தொடர்பான எதிர்ப்புப் பிரசாரங்களை உருவாக்க வேண்டும். இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்ள வேண்டும். இதைப் பற்றி நாம் பேச வேண்டும்.”

- “இந்த நடைமுறையைச் செய்ய குறிப்பிட்ட நபர்கள் எவ்வளவு தகுதியானவர்கள் என்று நாம் கேள்வி கேட்க வேண்டும், அவர்கள் எந்த அளவிற்குத் தகுதியானவர்கள் என்று எங்களுக்குத் தெரியாது.”

காத்தான்குடியைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரிடம் வாழைச்சேனையைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது பேத்திக்குக் கத்னா மற்றும் காது குத்துவதற்குச் சென்றபோது, “இறைவன் மனித உடலை எவ்வாறு படைக்க வேண்டுமோ அவ்வாறே இயற்கையாகப் படைத்துள்ளான். ஆகவே நாம் இறைவன் படைத்த உடம்பில் மாற்றம் செய்யத் தேவையில்லை” எனக்கூறி மறுத்துவிட்டார். அவர் காது குத்துதலை மட்டும் அதுவும் பேத்தியாரின் வற்புறுத்தலின் பேரில் மேற்கொண்டிருந்தார்.


# பெண்கள் மற்றும் பெண்கள் உரிமைகளில் விருத்த சேதனத்தின் தாக்கம் எத்தகையது?




படம் **2.3** பெண்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் மீதான **FGMC** இன் தாக்கம் குறித்த கருத்துக்களை விளக்குகிறது

"சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சிவில் சமூக நிறுவனங்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்றிற்கு நான் சென்றபோது, அவர்கள் பாலியல் மற்றும் சுகாதார உரிமைகள் பற்றிய அனைத்து விடயங்களையும் பற்றிக் கலந்துரையாடிய போதிலும், நான் கொண்டு சென்ற FGMC - பற்றிய விடயங்களைக் கருத்தில் கொள்ளவில்லை. அவர்கள் சிறுவர்கள் உரிமைகளுக்கான விடயங்களை ஆராய்ந்தபோதும் இப்பச்சிளம் பிள்ளைகளுக்கு நடப்பதைத் தீர்க்க அந்த இடத்தில் எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை. (ஆய்வுக் குழு உறுப்பினர் - அம்பாறை)

# பெண் விருத்த சேதனத்தை ஆதரிப்போர் அல்லது ஊக்குவிப்போர் யார்?





படம் **2.4 FGMC** இன் அடையாளம் காணப்பட்ட ஆதரவாளர்கள்

இவ்வாய்வில் பலர் விருத்தசேதனம் செய்வதற்கு மருத்துவர்களை நாடியதாகக் குறிப்பிட்டனர். சில இடங்களில் மருத்துவர்கள் விருத்த சேதனத்தை ஊக்குவிப்பதைக் காண முடிந்தது. பின்வரும் குறிப்புகள் மத்திய மாகாணத்தில் இருந்து செய்யப்பட்ட ஆய்வில் இருந்து பெறப்பட்டது.

- "கண்டியில் எனது மகளுக்கு கத்னா செய்தேன். பெண் மருத்துவர் பெயர் "ஆ"
- அக்குறணையில் "இ" என்ற மருத்துவர் இருக்கிறார். கொடுகம்பரிய பிரதேசத்திற்குச் சென்றே கத்னா செய்ய வேண்டும். எங்களிடம் வரும் ஒஸ்தா மாமிகளைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். ஆனால் நான் அவர்களைப் பார்க்கவில்லை."
- "கடுகஸ்தோட்டையில் வைத்தியர் "ஆ"விடம் நான் கத்னா செய்தேன். நிறைய வைத்தியர்களின் மனைவிமார் கத்னாவைச் செய்கிறார்கள். குருநாகல் வைத்தியர் "ஆ"வினது மனைவியும் பெண்களுக்குக் கத்னா செய்கிறார்."
- "நான் என் பேத்திக்காக வைத்தியர் "ஆ"விடம் சென்றேன். அவர் காது குத்துவதற்கு 3000 ரூபா மற்றும் கத்னா செய்வதற்கு 2000 ரூபா எடுத்துக் கொள்கிறார்."
- "கடுகஸ்தோட்டையில் DMO ஒருவரும் கத்னாவைச் செய்தார். அவருடன் கத்னா செய்வதற்குப் பெண் மருத்துவர் ஒருவரும் இருக்கிறார்."
- "கடுகஸ்தோட்டையில் வைத்தியர் திருமதி "உ" அவருக்கு ஒரு கிளினிக் இருந்தது. அங்கு கத்னா செய்வார்கள்."
- "ஒஸ்தாத் மாமி முன்பு எங்கள் வீட்டிற்கு வரும்போது சிறிதளவு மஞ்சள் தூள் எடுத்துக் கொண்டு வருவார். அவர் வந்து கத்னா செய்வார். நாம் கிருமிகள்; பற்றி மட்டுமே சிந்திக்கிறோம். ஆனால் பெண் பிள்ளைகளுக்கு கத்னா செய்வதால் ஏற்படுகின்ற பின்விளைவுகள் தொடர்பாகவும் வளர்ந்த பின்னர் பெண் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்ற சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் யோசிப்பது இல்லை. கத்னாவைச் செய்ய நாங்கள் இப்போது மருத்துவரிடம் செல்கிறோம். டாக்டர் "ஆ" என்று ஒரு மருத்துவர் இருக்கிறார். அவர் ஒரு OBGYN. ஆனால் அவர் குழந்தைகளைப் பிரசவிப்பிப்பதை விட கத்னாவை அதிகம் செய்கிறார்."
- ஒரு ஆயுர்வேத மருத்துவர் விருத்தசேதனம் செய்வதை நியாயப்படுத்தினார். "நாங்கள் கத்னா செய்கிறோம். ஏனென்றால், சில நேரங்களில் அந்தரங்க உறுப்புகள் பருமனாகப் பிறக்கும் பெண் குழந்தைகள் இருக்கிறார்கள். சில சமயங்களில் கத்னா செய்வதால் சிறியதாக மாறுவதற்கு உதவுகிறது. அவர்கள் மிகைப் பாலினத்தை உணர்ந்தால், அவர்களின் பாலியல் உணர்வுகளை சாதாரண நிலைக்கு குறைக்கவும் கத்னா உதவுகிறது. மடவளையில் வைத்தியர்கள் கத்னா செய்வதில்லை. அதனால் வெகு தொலைவில் இருந்து மக்கள் வருகை தந்து கத்னாவைச் செய்கிறார்கள். அவர்களை எங்களால் திருப்பி அனுப்ப முடியாது. சில சமயங்களில் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களும் தங்கள் வளர்ந்த குழந்தைகளை இங்கு அழைத்து வருகிறார்கள். ஏனெனில் அங்கு கத்னா செய்வதற்கு அனுமதியில்லை."

# பெண் விருத்த சேதனம் பற்றிய முடிவுகளில் ஆண்களின் பங்கு இருக்க வேண்டுமா?




படம் **2.5 FGMC** ஐ ஆண்களுடன் விவாதிப்பது குறித்த கருத்துக்களை விளக்குகிறது

கீழ் வருவன ஒன்பது மாவட்டங்களிலும் நடாத்தப்பட்ட குழுக் கலந்துரையாடலில் இருந்து பெறப்பட்டவை.

பெண் விருத்த சேதனம் பற்றிய முடிவுகளில் ஆண்களின் பங்கு காணப்படுகிறது. ஏனெனில் கத்னா தொடர்பான செலவுகளுக்கு பெண்கள் ஆண்களிடம் இருந்தே பணத்தைப் பெறுகின்றனர். இருப்பினும் சில இடங்களில் ஆண்கள் மறுப்புத் தெரிவித்த சந்தர்ப்பங்களும் உள்ளன.

- “ஆண்கள் தங்கள் வீடுகளில் முடிவுகளை எடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்தும் சக்தியைக் கொண்டுள்ளனர், எனவே அவர்கள் அறிந்திருப்பது முக்கியமானது. எனவே அவர்கள் தீமைகளை அறிந்தால், அவர்களால் அதைத் தடுக்க முடியும்.
- "குழந்தைகளின் அப்பாக்களிடம் மற்றும் பெண்களின் கணவர்களிடம் கேட்காமல் நாம் அதைச் செய்யக்கூடாது."
- “குழந்தைகளுக்கு கத்னா செய்கிறார்கள் என்றால். குழந்தைகளின் தந்தைகள் தங்கள் குழந்தைகளுக்கு என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்."
- “இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றால் எங்கள் கணவர்களின் ஆதரவு தேவை”

# பெண் விருத்த சேதனம் தொடர்பான செயற்பாட்டை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது எதிர்கொள்ளும் சவால்கள்

பெண் விருத்த சேதனம் தொடர்பான செயற்பாட்டை தொடர்வதற்கு ஆதாரபூர்வமான சான்றுகள் இல்லாதபோது அச்சந்தர்ப்பத்தில் மதத்தைத் தெடர்புபடுத்திக் கொள்கின்றனர். ஆய்வின் போது வெளிப்படையாக பெண்களது பாலியல் உறவு, உணர்ச்சி தொடர்பாக எல்லா வினாக்களையும் வினவ முடியாதிருந்தது. பெண்களுக்கு ஏற்படுகின்ற உடல் சார்ந்த பாதிப்புகள் குறித்துப் புரிந்து கொள்ளவும் அவை சார்ந்த கருத்துகளைப் பெறும் சந்தர்ப்பம் அமையவில்லை. பெண்களுக்கு கத்னா தொடர்பான சரியான விளக்கத்தை அறிந்து கொள்வதில் ஆர்வமின்மையால் பாலியல் உணர்ச்சி தொடர்பான தகவல்களைப் பகிர்வதற்கு பெண்கள் தயாராக இல்லை. பெண் விருத்தசேதனத்தைப் பற்றிய ஒரு விழிப்புணர்வு ஏற்பட்ட பிறகு மனதில் தோன்றுகின்ற மன உளைச்சல் பாரதூரமானது. அத்தோடு பெண் விருத்தசேதனம் தொடர்பாக வெளிப்படையாக யாரும் கதைப்பதற்கு முன் வருவதில்லை. இளைய தலைமுறையினர் இதனைக் கதைப்பதற்கு முற்பட்டாலும் கூட முதிய பெண்கள் அதனைத் தடுத்து விடுகின்றனர். பெண் விருத்த சேதனத்தைச் செய்யக்கூடாது என்பதற்கான போதிய ஆதாரங்கள் இன்னும் தெரியாத நிலையிலேயே சமூகத்தில் உள்ள சாதாரண பெண்கள் இருக்கிறார்கள். பெண் விருத்தசேதனத்தை ஆதரிக்க முற்படுகின்றவர்கள் சமூகப் புரட்சி வாதிகளாக சித்தரிக்கப்படுகின்றனர்

# ஆராய்ச்சியாளர்களின் பார்வைகளின் அடிப்படையில் வரம்புகள் உள்ளிட்ட அவதானிப்புகள்

நேர்காணல் செய்யப்பட்டவர்கள் சிலர் தங்கள் சமூகத்தில் உள்ள கத்னா நடைமுறையைப் பற்றிக் கண்மூடித்தனமான ஆதரித்து வாதிடும் தன்மை கொண்டவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் இந்த நடைமுறை தொடர்பாக பலர் மாற்றுக் கருத்துக் கொண்டிருந்தாலும், சுகாதாரம் சார் தெளிவு இருப்பினும் கத்னா எனும் கலாசார நடைமுறை தொடர்கின்றது.

சில பங்கேற்பாளர்கள் ஒரு மதக் கடமையை நிறைவேற்ற இந்த நடைமுறையை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினாலும் அவர்களது கூற்றுக்களுக்கு ஆதரவாக ஹதீஸ் அல்லது மதம் சார்பான நூல்களின் எந்த ஆதாரத்தையும் அவர்களால் வழங்க முடியவில்லை. அல் குர்ஆனில் ஆண்-பெண் இருபாலருக்கும் கத்னா செய்யப்படுவது தொடர்பாகச் சொல்லப்படவில்லை என்பதைக் கண்டு அவர்களில் பலர் ஆச்சரியப்பட்டனர். இவர்களில் சிலர், நோய்த் தொற்றுகள் மற்றும் நோய்களின் அபாயங்களை மேற்கோள் காட்டி பெண்களைச் சுத்தமாக வைத்திருக்கும் செயல்முறை என்று வலியுறுத்தினர்.

பெண் கத்னா செய்யும் பகுதியில் நரம்புகள் பரவியிருப்பதை அல்லது யோனி சுயமாகச் சுத்தம் செய்யப்படுவதைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர். அவர்களில் பலர் முஸ்லிம் பெண்களை தங்கள் முஸ்லிமல்லாத சகாக்களுடன் ஒப்பிடும்போது இணக்கமாகவும் கீழ்ப்படிதலுடனும் வைத்திருக்கும் நடைமுறையை வலியுறுத்துகின்றனர்.

ஆய்வின்போது, பெண் விருத்த சேதனம் செய்யும் நபர்களைக் கண்டுபிடிப்பதோ அல்லது அவர்களுடன் கலந்துரையாடுவதோ பெரும் சவாலான விடயமாகக் கருதப்பட்டது. இருப்பினும், ஆய்வினை மேற்கொளளும்போது, ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் கொடுத்த தகவலின் அடிப்படையில் கத்னா செய்வோரை ஓரளவு அடையாளம் காண முடிந்ததோடு, அவர்களுடன் கத்னா பற்றிக் கலந்துரையாடக் கூடிய வாய்ப்பும் அமைந்தமை மிக முக்கியமானது. அத்தோடு இந்த ஆய்வில் கத்னாவைத் தூண்டும் பல காரணிகள் அறியப்பட்டன. அவற்றில் மதம் மிகப் பிரதானமான காரணியாகும். மதம் அவர்களின் கருத்தில் ஒரு இன்றியமையாத காரணியாக இருந்தபோதிலும் பல பெண்களுக்கு அது மத ரீதியாக உந்துதல் தரவில்லை. மாறாக தூய்மைக்கான தேர்வு அல்லது பாலுணர்வைக் கட்டுப்படுத்துவதற்கான முக்கிய காரணி என்பதை ஒப்புக்கொண்டனர்.
சில பெண்கள் கத்னாவை தாம் செய்ய வேண்டிய ஒரு மத நடைமுறை என்று வலியுறுத்தினார்கள். மற்றையவர்கள் நீங்கள் அதைச் செய்தாலும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை என்று நம்பினர். இந்த நடைமுறைக்கு எதிராக தனி நபர் வழக்கொன்றைப் பதிவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், சட்டக் காரணிகளை அணுகுவது கடினமாகவே உள்ளது .

இது மதத்தின் பெயரால் செய்யப்படுகிறது என்பதற்கு ஆதாரமாக ஆய்வுக்கு உட்படுத்திய பலரால் ஹதீஸிலோ அல்லது அல் குர் ஆனில் உள்ளது என்றவாறான எவ்வித ஆதாரங்களையும் என்னுடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

இந்த ஆய்வில் நான் கண்ட ஒரு வெளிப்படையான வரம்பு என்னவென்றால், அதிகமான மருத்துவ நிபுணர்களுடன் என்னால் பேச முடியவில்லை. தனிப்பட்ட முறையில் நான் அவர்களை அணுகியபோது, அவர்கள் எனது தகைமையானது அவர்களது துறை சார்பானது இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு பேச முன்வரவில்லை. கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையின் மனநலப் பிரிவுத் தலைவரை என்னால் தொடர்பு கொள்ள முடிந்தது. ஆனால் இந்த அறிக்கைக்கான சந்திப்பிற்கான நேரத்தை அவர் ஒதுக்காததால் சரியான நேரத்தில் என்னால் அவரை அணுக முடியவில்லை.

மற்றுமொரு சவால் என்னவென்றால், நான் ஆய்வுக்கு உட்படுத்திய அறிமுகமான நபர்கள் என் மீது கரிசனை காட்டினாலும் குறிப்பிட்ட இவ்வாய்வு சம்பந்தமாக என்னை அவதானமாக இருக்குமாறு பல்வேறு நபர்களின் ஊடாக எனக்கு அழுத்தம் தந்தார்கள். இங்கு கத்னா தொடர்பாக மாற்றக்கூடியது எதுவுமில்லை எனவும் நான் ஏன் இவ்வாய்வில் ஈடுபடுகின்றேன் எனவும் கேள்வி எழுப்பினர். பலருக்கு, கத்னா தொடர்பாக நீண்ட நேரம் விவாதிப்பது அல்லது தங்கள் குடும்பத்திற்கு வெளியே ஒருவரிடம் பேசுவது இதுவே முதல் முறையாக இருந்தது.

குறிப்பிட்ட ஆய்வில் வரம்புகள் உள்ளன. சட்டக் கண்ணோட்டம் மற்றும் மருத்துவக் கண்ணோட்டத்துடன் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் இனிவரும் காலங்களில் வருகின்ற ஆய்வுகளில் அதிக மாதிரிகள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

# பெண் விருத்தசேதனம் தொடர்பான நடைமுறையை நீக்குவதற்கான பரிந்துரைகள்

1. பெண் விருத்தசேதனம் இஸ்லாத்தில் கட்டாயமாக்கப்பட்ட ஒன்றோ அல்லது விரும்பப்பட்ட ஒன்றோ அல்ல என்பதைப் புரியவைக்க வேண்டும். அதாவது 'அல் குர்ஆன் சுன்னாவில்' கத்னா பற்றிக் கூறவில்லை என்பதைக் கையேடுகளைக் கொண்டு சமூகத்திற்குத் தெளிவுபடுத்த வேண்டும். நபிகள் நாயகம் அவர்கள் தனது மகளுக்கு கத்னா செய்ததற்கான ஆதாரங்கள் இல்லை என மதம் சார்பான வல்லுனர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

2. குறிப்பிட்ட பகுதியில் அனைவரும் மதிக்கும் அனைவரும் ஏற்கக்கூடிய (கொள்கை சாரா மார்க்கம் தெரிந்த) ஒருவர் மூலம் விழிப்புணர்வுச் செயற்பாடு செயற்படுத்தப்படல் வேண்டும். மதப் பிரசங்கக் கூட்டம் (பயான்) நடைபெறுகையில் இவ்விடயம் தொடர்பாக அறிவூட்டல் செய்யப்பட வேண்டும்.

3. குறிப்பிட்ட பிரதேச ஆண் மௌலவிகள் மற்றும் பெண் மௌலவியாக்களுக்கு குறிப்பிட்ட விடயம் மதக் கடமையோ அல்லது அல் குர்-ஆன் மற்றும் ஹதீஸில் குறிப்பிடப்படவில்லை என்பதை ஆதார பூர்வமாகத் தெளிவுபடுத்துவதோடு, இவர்கள் இத்தெளிவுபடுத்தலை பெற்றுக் கொண்டதன் பின்னர் தாங்கள் ஆற்றுகின்ற சொற்பொழிவுகளில் கத்னா தொடர்பாக பேசுவதற்கு முன்வருதல் வேண்டும்.

4. இந்த விடயம் தொடர்பாக அறிவுசார் நபர்கள் குரல் கொடுத்தல் வேண்டும்.

5. விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், வைத்தியர்கள் மூலம் அறிவுறுத்தல்களை வழங்குதல்.

6. குடும்ப நல உத்தியோகத்தர்கள் ஊடாக கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களுக்கு கத்னா தொடர்பாகவும் எதிர்காலத்தில் கத்னா செய்வது தொடர்பான சுகாதார, உள மற்றும் உடல் ரீதியான பாதிப்பு குறித்தும் விழிப்புணர்வு கொடுத்தல் வேண்டும்.

7. பெண் உறுப்பின் குறிப்பிட்ட பகுதி பெண்களது பாலியல் உணர்வின் இருப்பிடம் என்பதையும் இது பெண்களது பாலியல் உரிமை சார்ந்த விடயம் என்பது பற்றிய தெளிவை பெண்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

8. கத்னா நடைமுறை பெண்களது பாலியல் உணர்வை மங்கச் செய்து பாலியல் உறவில் ஆண்கள் மட்டுமே இன்பத்தை அனுபவிக்கின்ற போக்கை உருவாக்குகின்றது. ஆகவே முஸ்லிம் பெண்களது பாலியல் உரிமையை பறிக்காத வகையில் கத்னாவைத் தடைசெய்ய சட்டம் கொண்டுவரப் படல் வேண்டும்.

9. பெண் விருத்தசேதனம் செய்வது சட்டத்திற்குட்பட்டதல்ல என்பதையும் அது பெண் பிள்ளைகளது பாலியல் உரிமை மீறல் என்பதையும் சமூகத்திற்கு தெளிவுபடுத்தல்.

10. திருமணத்திற்கு முன்னர் பெண்களுக்குக் குறிப்பிட்ட விடயம் தொடர்பான தீமைகள் பற்றி தெளிவுபடுத்தல் வேண்டும்.

11. பெண் விருத்தசேதனம் செய்யப்படுவோருக்கு ஏற்படும் உடல், உள பாதிப்புகள் தொடர்பாக ஒவ்வோர் குடும்பத்தினருக்கும் தெளிவை ஏற்படுத்த வேண்டும்.

12. பெண்கள் மகப்பேற்றுக்குப் பிறகு வைத்தியசாலையில் இருந்து வீடு செல்லும் பொழுது வைத்தியசாலையில் உள்ள விழிப்புணர்வு வழங்கும் பிரிவு, பெண் விருத்தசேதனத்தால் ஏற்படும் உடல், உள பாதிப்புகள் தொடர்பாக விழிப்புணர்வு செய்தல் வேண்டும்.

13. பெண் விருத்தசேதனம் செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

14. குழு கலந்துரையாடல் போன்றவற்றாலும் பெண்கள் மதரஸாக்களில் ஏற்றுக் கொள்ளக்கூடிய சமயத் தலைவர்களையோ அல்லது அறிஞர்களைக் கொண்டு தெளிவு ஏற்படுத்த வேண்டும்.

15. பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், மௌலவிமார்கள் தமது குடும்பத்தில் மாத்திரம் கத்னாவைத் தடைசெய்யாது ஏனையோருக்கும் அறிவுறுத்தல் வேண்டும்.

16. பெண் விருத்தசேதனத்தை செய்கின்ற ஒஸ்தாமாமிகள் மற்றும் பிறமுக்கிய பயிற்சியாளர்களுக்கு இந்த வழியைப் பின்பற்றுவதைத் தவிர்த்து மாற்றுத் தொழில் வழிகளைச் செய்வதற்கு வழிப்படுத்தல் வேண்டும் .

17. மரபுசார் தொடர்ச்சியாக கத்னா காணப்படுவதால் சமூக அழுத்தம் இங்கு பாரிய செல்வாக்கு செலுத்துகிறது. அவற்றிலிருந்து கத்னா பெண்களது பாலியல் உரிமை மீறல் தொடர்பான விடயம் என்பதனை அழுத்திக் கூறவேண்டும்.

18. பெண் விருத்தசேதனத்தைச் செய்கின்ற மருத்துவர்களுக்கும் தனியார் மருத்துவ மனைகளுக்கும் கத்னா குற்றவியல் சட்டத்திற்கு உட்பட்ட விடயம் என்பதை சுகாதார அமைச்சின் ஊடாக அறிவுறுத்தல் வேண்டும்.

# முடிவுரை

இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தில் கத்னா நடைமுறையை சுற்றியுள்ள ஆழமான கலாசார மற்றும் சிக்கலான மத நிலைப்பாடுகளை இச்செயற்பாட்டு ஆய்வு வெளிப்படுத்தியுள்ள அதேவேளை, ஒரு விடயத்தை தெட்டத் தெளிவாக முன்வைத்துள்ளது. பெண் பிள்ளைகளில் நடைமுறைப்படுத்தும் இச்சடங்கு இஸ்லாமிய மதக் கோட்பாடுகளிலிருந்து வரவில்லை. மாறாக, பாரம்பரியமாக, சமூக நிலைப்பாடாக, தவறான தகவலாகப் பின்பற்றப்படுகிறது. அவற்றிற்கு விளக்கங்களாக முன்வைக்கப்படும் நம்பிக்கை, ஆரோக்கியம், நல்லொழுக்கம் ஆகியவை குர்ஆனிலோ ஹதீஸிலோ வலிதாக ஆதாரமளிக்கப்படவில்லை. மாறாக இந்நடைமுறையானது ஓர் அதிகாரக் கட்டுப்பாடாக பாலியல் விதிகளை வரையறுப்பதாக பெண்களின் தனித்துவத்தைக் குறிப்பாக அவரகளது உடல்கள் ஆளுமை மற்றும் பாலியல்பைக் குறுக்கிக் கொள்ளும் ஆணாதிக்க அதிகாரத்தை வலுப்படுத்துவதாக அமைவது எமது ஆய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

கத்னா குறித்த நிலைப்பாடானது மத நம்பிக்கை, கலாசாரப் பாரம்பரியம், மாறுபட்ட விழிப்புணர்வு மட்டங்கள் போன்றவற்றால் சமூகத்தில் அழமாக ஊடுருவியுள்ளமையை ஆய்வின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன. இதனை ஆதரிக்கும் பெண்கள் மத விளக்கங்களை ஆதாரப்படுத்தி, ஹதீஸில் கட்டாயம் எனக் கூறப்படுவதாக வாதிடுகிறார்கள். பெண் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் இதன் பாரதூர விளைவுகளை மறுப்பவர்களாகவோ அன்றி அது குறித்து அறியாதவர்களாகவோ காணப்படுகிறார்கள். மறுபுறத்தே, கத்னாவை எதிர்ப்பவர்கள், குறிப்பாகப் பிரத்தியேக அனுபவமுள்ள அல்லது பாதக அனுபவங்களைக் கண்ட பெண்கள், தொற்று மற்றும் பாலியல் உணர்வு குறைதல் போன்ற உடலியல் சிக்கல்கள் ஏற்பட்டதையும் மனக் காயம், திருமணத்தில் அதிருப்தி, விவாகரத்து நிகழ்ந்தமை உட்பட்ட உளவியற் பாதிப்புகள் குறித்தும் பேசுகிறார்கள். ஆண்களின் நன்மைக்காக தமது பாலியல்பு மற்றும் உடல்சார் ஆளுமையினைத் தாம் இழக்கக் காரணமாக கத்னா அமைந்துள்ளதாகப் பெண்கள் கூறுவதும் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகிறது. தகுதியற்றவர்கள் அதனைச் செய்வதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் பாரம்பரியமாக இதனைச் செய்பவர்களால் பெண் பிள்ளைகளது ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்களை அதிகரிக்க ஏதுவாகிறது.

அத்தோடு, இந்த நடைமுறை பற்றிக் குறிப்பிடத்தக்களவில் ஒரு தெளிவற்ற, தவறான தகவல்/புரிதல் காணப்படுவதை இவ்வாய்வு சுட்டிக் காட்டியது. பங்குபற்றுநர்களில் 383 பேர் தமது மகள்களுக்கு இதனைச் செய்ய உத்தேசித்துள்ள அதேவேளை ஏறத்தாழ அதற்குச் சமனான எண்ணிக்கையினர் தீர்மானிக்க முடியாமலோ அல்லது நடுநிலைமையாகவோ காணப்பட்டார்கள் அல்லது பதிலளிக்க மறுத்தார்கள். இத்தரவினுள் ஒரு முரண்பட்ட நிலைமையானது சமிக்ஞையாகக் காணப்பட்டாலும் ஒரு மாற்றத்திற்கான மறைமுக வழியாகத் தென்பட்டது. மத ரீதியாகக் குழப்பம் ஒன்று நிலவுகிறது. ஏனெனில் 398 பங்குபற்றுநர்கள் அதனை மதக் கடப்பாடாகக் கருதுகின்றனர். ஆனால் இஸ்லாமிய அறிஞர்களும் பின்பற்றுநர்களும் இது குர்ஆனிற்கு

அமைவான தேவையோ அல்லது ஹதீஸில் நம்பப்படுவதோ இல்லை எனத் தெளிவுபடுத்துகிறார்கள். அத்துடன், சட்ட ரீதியான விழிப்புணர்வு மிகக் குறைவு. பலருக்கு அதன் சட்ட நிலைப்பாடு குறித்துத் தெளிவில்லை. பங்குபற்றுநர்களில் பலர் கத்னா நடைமுறை நன்மையானது என்பதை விடத் தீங்குமிக்கது எனக் கருதிய போதிலும், சுகாதாரம் குறித்த புரிதலும் வேறுபட்டுக் காணப்படுகிறது. ஆண்களையும் தீர்மானம் எடுக்கும் செயன்முறையாக்கத்தில் ஈடுபடுத்தி, பாரம்பரியமாக ஆழமாக விதைக்கப்பட்டுள்ள கதைகளையும் தவறாக விளக்கப்பட்டுள்ள மதப் போதனைகளையும் நீக்குவதில் கவனம் செலுத்தி விழிப்புணர்வு அதிகரிக்கப்படுதல், உரையாடல், சட்ட சீராக்கம் ஊடாக இந்த நடைமுறையை இல்லாதொழிக்கலாம் என அவர்களிற் பலர் நம்புவது ஊக்கம் தரும் செய்தியாக அமைகிறது.

சமூக வற்புறுத்தலாக மிக வலுவாகப் பாரம்பரியமாக சத்தமில்லாமல் நிகழ்ந்தாலும் கூட எதிர்ப்பும் அதிகரித்துள்ளது. இளம் பெண்கள், சில மத அறிஞர்கள், மற்றும் சுகாதார தொழில் வல்லுநர்கள் சமூகத்தில் தற்போதுள்ள நிலைப்பாட்டை எதிர்த்து நிற்க ஆரம்பித்துள்ளனர். அவர்கள் குரல் பெரும்பாலும் தனித்து ஒதுக்கப்பட்டாலும் கூட துணிகரமானது என்பதுடன் கதைக் களத்தைத் திசை திருப்புவதில் முக்கியமானதாக ஒலிக்கிறது. இருப்பினும், மாற்றம் சற்றே மெதுவாகத் தான் நிகழ்கிறது. இதற்குக் காரணம் பிரிவுபட்ட சமூகம், அச்சம், களங்கம், பரம்பரை இடைவெளி முரண்பாடுகள் மற்றும் பலமான சட்டக் கட்டமைப்புகள் இல்லாமை ஆகும்.

இச்செயற்பாட்டு ஆய்வானது எளிமையான தீர்வுகளை முன்வைக்கவில்லை. இதன் அணுகுமுறையும் மட்டுப்படுத்தப்பட்டது. ஆயினும், விழிப்புணர்வு உருவாக்கம், உரையாடல், நம்பிக்கை ஆகியவை கொண்டு கட்டியெழுப்பி முன்னோக்கிச் செல்லக் கூடிய வழியினைக் காண்பித்துள்ளது. கத்னாவை இல்லாது செய்வது என்பது உண்மையைப் பேசக் கூடிய மதத் தலைவர்கள்/அறிஞர்கள், தீங்கான செயற்பாடுகள் குறித்து அறிவுரை வழங்கக் கூடிய சுகாதார சேவையாளர்கள், சிறுமிகளதும் பெண்களதும் உரிமைகளை மதிக்கும் சட்ட முறைமைகள், மற்றும் மிக முக்கியமாகக் கத்னாவுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் வலுவூட்டப்பட்டுத் தமது கதைகளை அவமதிப்பின்றிப் பொதுவெளியில் பகிரக் கூடியவர்கள் என சமூகத்தில் அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய விடயமாகும்.

# பின் இணைப்பு

Telephone ) 0112669192, 0112675011, 0112698507, 0112694033, 0112675449, 0112675280
Fax ) 0112693866, 0112693869, 0112692913
e-mail ) postmaster@health.gov.lk
website ) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

My No. FHB GWH 2018
Your No. )
Date 2018/05/09

සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதார,போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
**Ministry of Health, Nutrition & Indigenous Medicine**

General Circular Letter No: 02-33 /2018

All Provincial Directors of Health Services
All Regional Directors of Health Services
All Heads of the Institutions

COMMITTEE OFFICE
14 MAY 2018
PARLIAMENT OF SRI LANKA

**Medical Professionals Involvement in Female Genital Mutilation**

Female genital mutilation (FGM) is a harmful traditional practice seen in some countries in Africa, Middle East and Asia. It is also known as female genital cutting (FGC) or female circumcision, and involves intentional alteration or injury of female genital organs. Though not commonly seen, it has been reported that this is carried out among some groups of individuals in some regions in Sri Lanka.

As you are aware, this practice is associated with many negative health consequences. The Sectoral Oversight Committee on Women and Gender of Sri Lanka parliament also has identified this procedure as harmful, and has initiated processes to abolish this practice in Sri Lanka. As a part of this, a request has been made by the above committee to the Ministry of Health, Nutrition & Indigenous Medicine to issue a circular to the medical professionals requesting them to refrain from any involvement with FGM.

Accordingly, Family Health Bureau prepared a document based on international observations made on the ill effects of FGM, and also conducted a consultative meeting with relevant health and non-health stake holders on this matter. The following factors were emphasized at the meeting, and were endorsed by all participants.



படம் **2.6 2018** இல் வெளியிடப்பட்ட சுகாதார அமைச்சு சுற்றறிக்கையைக் காட்டுகிறது

- FGM of any degree has no medical benefit to the individual.
- FGM of any degree can lead to harm and suffering to the individual girl /woman, short term and long term, physical and psychological.
- FGM is a human right violation and can be considered as torture under the Children's Charter.

Any involvement in this procedure, be it conducting the procedure or encouraging it, is considered highly unethical. As such, hereby all Medical Professionals, whose primary ethical and moral obligation towards mankind is to 'do no harm' are instructed to refrain from any involvement regarding female genital mutilation. Disciplinary action shall be taken against any Medical Professional practicing or promoting Female Genital Mutilation, and not adhering to the stipulated instructions.

Dr. Anil Jasinghe
Director General of Health Services

Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10

Cc: Secretary, Ministry of Health, Nutrition and Indigenous Medicine
Deputy Director General / Medical Services
Deputy Director General / Public Health Services II
Director / Maternal and Child Health, Family Health Bureau
Director / National Institute of Health Sciences
Chief Medical Officer of Health / Colombo Municipal Council
Provincial Consultant Community Physicians
Medical Officers / Maternal & Child Health
Medical Officers of Health

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
(Incorporated by Act of Parliament No.: 51 of 2000)

எமது இல.: 005/ACJU/F/2008

1429.01.05

2008.01.15

அல்-ஹாஜ் எச்.எம்.அமீர்தீன்
367/1, பலதொல்ல,
தெங்கல்ல,
கண்டி.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹ்.

**பெண்களுக்கு கத்னா செய்தல்**

பெண்களுக்கு கத்னா செய்தல், கூலிக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கடை அல்லது வீட்டை சொந்தமாக்கிக்கொள்ள முயற்சித்தல் பற்றி மார்க்கத் தீர்ப்புக் கோரி தங்களால் அனுப்பப்பட்ட 2007.07.08 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் இத்தால் தொடர்புகொள்ளப்படுகின்றது. அவற்றில் பெண்களுக்கு கத்னா செய்தல் சம்பந்தமாக மார்க்கத் தீர்ப்பு கீழே தரப்படுகின்றது. கூலிக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கடை அல்லது ஒரு வீட்டை சொந்தமாக்கிக்கொள்ள முயற்சித்தல் பற்றிய மார்க்கத்தீர்ப்பு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

எல்லாப் புகழும் வல்ல அல்லாஹ்வுக்கே. ஸலாத்தும், ஸலாமும் அவனின் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார்கள், தோழர்கள் மீதும் உண்டாவதாக!

இஸ்லாமிய மார்க்கத்தில் 'கத்னா' முக்கிய இடத்தை வகிக்கின்றது. மனிதனுடைய பாலுறுப்பை சுத்தமாக வைத்திருப்பதற்கும், இல்லற வாழ்க்கையில் மனிதன் இன்பமடைவதற்கும் விருத்தசேதம் எனப்படும் கத்னா செய்வது இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது.

இதை மார்க்க அடிப்படையில் நோக்கும் போது இமாம் நவவி (ரஹிமஹுல்லாஹ்) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

1

211, Orabi Pasha Street, Colombo-10, Sri Lanka.
Telephone : +(94)11 5373148, Fax : +(94)11 2435859, E-mail : jamiyyah@lankabellnet
www.jamiyyathululama.org

"விருத்தசேதம் செய்வது எமது (ஷாபிஈ) மத்ஹபில் ஆண்கள் மீதும் பெண்கள் மீதும் வாஜிபாகும். இக்கருத்தையே இமாம் அஹ்மத் (ரஹிமஹுல்லாஹ்) உட்பட முன்னோர்களில் அதிகமானவர்கள் கூறியுள்ளனர். மேலும் இது அனைவர் மீதும் ஸுன்னத் என இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீபா (ரஹிமஹுமல்லாஹ்) கூறியுள்ளார்கள்."
(அல் மஜ்மூஃ – பாகம்: 01, பக்கம்: 164)

அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்.


வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹ்.


அஷ்-ஷைக் டப்ளியு. தீனுல் ஹஸன்
செயலாளர், ஃபத்வாக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா

அஷ்-ஷைக் எச். அப்துல் நாஸர்
பொதுச் செயலாளர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா


அஷ்-ஷைக் எம்.ஐ.எம். ரிஸ்வி (முஃப்தி)
தலைவர்,
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா.

படம் **2.7** கத்னாவை ஒரு கட்டாய நடைமுறையாக உறுதிப்படுத்தும் அகில இலங்கை ஜமியத்துல் உலமாவால் வெளியிடப்பட்ட ஃபத்வாவை **(**முறையான தீர்ப்பு**)** காட்டுகிறது**.**




படம் **2.8** பெண்களுக்கு விருத்தசேதனம் செய்யும் சேவைகளை **(female circumcision services)** வழங்கும் மருத்துவர்கள், மருத்துவமனைகள் மற்றும் **Ostha Maamis**களின் பட்டியல்களுடன் கூடிய சமூக ஊடக இடுகைகளை **Facebook** இல் காட்டுகிறது.





















பிரசுரிக்கப்பட்டது: ஜூன்-2025